REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஒக்டோபர் 4 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 234 | Tuesday 04, October, 2022 | 12பக்கங்கள் | 40/-







# லேக் ஹவுஸ் நிறுவன காணியை விற்கும் தீர்மானம் எதுவுமில்லை

## மீண்டும் அதே நிறுவனத்திற்கே குத்தகைக்கு வழங்க அமைச்சரவை பத்திரம்

### பாராளுமன்றத்தில் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

லேக் ஹவுஸ் நிறுவனக் காணியை வெளிநாட்டுக் கம்பனிக்கோ அல்லது தனியாருக்கோ விற்பனை செய்வதற்கு எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளப்பட வில்லை என்றும் அந்த நிறுவனத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

லேக் ஹவுஸ் நிறுவனம் அமைந் துள்ள காணியின் 99 வருட குத்தகைக் காலம் நிறைவுறும் நிலையில் அதனை மீண்டும் லேக் ஹவுஸ் நிறுவனத் திற்கே பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று டபிள்யூ. எச். எம். தர்மசேன எம்பி எழுப்பிய கேள்வி ஒன் றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித் தார்.

தர்மசேன எம்பி தமது கேள் வியின் போது,

பல்வேறு அரசியல் கட்சிகள் அது தொடர்பில் கூற்றுக்களை முன் வைத் துள்ளன. கடந்த அரசாங்கத்தின் கீழ் நாட்டின் பல முக்கிய இடங் களை விற்பனை செய்வதற்கு

06

## மறைந்த நடிகர் தர்ஷன் தர்மராஜின் பூதவுடலுக்கு ஜனாதிபதி இறுதி அஞ்சலி



மறைந்த நடிகர் தர்ஷன் தர்மராஜின் பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுதி அஞ்சலி செலுத்தினார்.

இலங்கையின் பிரபல நடிகர் தர்ஷன் தர்மராஜ் தமது 41 ஆவது வயதில் காலமானார். அன்னாரின் இறுதி கிரியைகள் எதிர்வரும் 5ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்நிலையில், பொது மக்களின் அஞ்சலிக்காக

06

# அடுத்த வருட முற்பகுதியில் 8,000 புதிய ஆசிரியர் நியமனம்



## கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றில் தெரிவிப்பு

**கல்வியியற் கல்லூரிகளில் விசேட பரீட்சைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அடுத்த வருடத்தின் முதல் பகுதியில் 8,000 ஆசிரியர்களை புதிதாக பாடசாலைகளுக்கு நியமிக்க தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், கல்வியியற்கல்லூரிகளில் அதற்கான பரீட்சைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அதற்கிணங்க அடுத்த வருட ஆரம்ப பகுதியில் 8000 ஆசிரியர்களை புதிதாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஹேஷா விதானகே எம்.பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை, ஆசிரியர் சேவையில் இணைந்து கொள்வதற்கு விருப்பமுடைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பரீட்சை ஒன்றை நடத்தி அதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் மாகாண சபை பாடசாலை ஆசிரியர்களாக அவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொண்டதன் பின்னர் மூன்று வருடங்களுக்குள் தேசிய கல்வி நிறுவனத்தின் ஒரு வருட டிப்ளோமா பாட நெறியை பூர்த்தி செய்வதற்கு சந்தர்ப்பமளித்து பயிற்சி ஆசிரியர்களாக அவர்களை உருவாக்குவதற்கு

06

## மண்சரிவு, வெள்ள அனர்த்தங்களிலிருந்து

# மக்களை பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை

**இ.தொ.கா பொதுச் செயலாளர் ஜீவன் வலியுறுத்து**

**கொழும்பு கோட்டை நிருபர்**



மண்சரிவு, வெள்ளம் உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களிலிருந்து பொது மக்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறு அபாயகரமான பகுதிகளாக இனங்காணப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து, அவர்களை அப்புறப்படுத்தி அவர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்குரிய காணிகளை வழங்குமாறு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை

06

## வன்முறை ஆர்ப்பாட்டங்களில் தெரியாது கலந்து கொண்ட

# அப்பாவிகளான பிள்ளைகளை தண்டிப்பதை ஏற்க முடியாது

**அது தவறான தீர்மானம் என்கிறார் நாமல் MP**



போராட்டம், வன்முறைகளுடன் சம்பந்தப்பட்ட அப்பாவி பிள்ளைகள் இருப்பதாகவும் அந்த பிள்ளைகளை விளக்கமறியலில் வைத்து தண்டிப்பது மற்றும் பொலிஸ் அறிக்கையை வழங்கி, அவர்கள் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளவிருக்கும் சந்தர்ப்பத்தை இல்லாமல் செய்வது தவறு எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

06

# இறக்குமதியாகும் அரிசியில் எவ்வித உலோகங்களும் கலக்கப்படவில்லை

## 275 அரிசி தொகுதி மாதிரிகளின் ஆய்வில் தெரிய வந்தது



இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் எவ்வித உலோகங்களும் கலக்கப்படவில்லையென அரிசி தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட மாதிரி ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட 275 அரிசி தொகுதிகளில் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், இந்த விடயம் தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கொள்கலன்கள் மற்றும் துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட அரிசியில் இருந்து குறித்த மாதிரிகள் பெறப்பட்டிருந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

06

# தனியார் துறையினர் ஊடாக மீனவருக்கு மண்ணெண்ணெய்

## வெளிநாடுகளிலிருந்து கொண்டு வர ஏற்பாடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடளாவிய ரீதியில் மீனவர்கள் எதிர் கொண்டுள்ள மண்ணெண்ணெய் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் வெளிநாடுகளில் இருந்து தனியார் துறை மூலம் மண்ணெண்ணெயை இறக்குமதி செய்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பில் வர்த்தக அமைச்சருடன் பேச்சுவார்த்தை

06

## 100 கொள்கலன் கோதுமை மா துறைமுகத்திற்கு

# இன்னும் இரண்டு வாரங்களில் 250 ரூபாவுக்கு கோதுமை மா

## பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை என்கிறார் அமைச்சர் நளின்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்த கோதுமை மா துறைமுகத்தை வந்தடைந்துள்ள நிலையில் இரண்டு வாரங்களில் 250 ரூபா விலையில் கோதுமை மாவை பெற்றுக் கொடுக்க முடியும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.நூறு கொள்கலன்களில் கோதுமை மா துறைமுகத்தை வந்தடைந்துள்ள நிலையில் இரண்டு வாரங்களுக்குள்

06

# பல்கலைக்கழக அனுமதிக்கு 93,000 விண்ணப்பங்கள்

## 45,000 மாணவர்களை உள்வாங்க தீர்மானம்

இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்காக சுமார் 93,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இவற்றில் சுமார் 45,000 மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, மருத்துவ பீடத்திற்கு 2,035

06

# கோபா குழுவுக்கான உறுப்பினர்கள் நியமனம்

## சபாநாயகர் நேற்று சபையில் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கோபா குழுவுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் தெரிவித்தார்.

கோபா குழுவுக்கான தலைவர் பதவி இதுவரையில் நியமிக்கப்படாத நிலையில் அக்குழுவுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

06

# மண் சரிவில் சிக்கி குடும்பப் பெண் பலி

## பத்தனை பகுதி தோட்டத்தில் அனர்த்தம்

**தலவாக்கலை குறூப் நிருபர்**



மலையகத்தில் கடந்த இரண்டு நாட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி

06

# நெருக்கடிக்கு தீர்வு காண ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு

## ஆணைக்குழுவின் தலைவர் உர்சுலா அறிவிப்பு



இலங்கை மக்கள் முன்னெப்போதும் இல்லாத சவால்களை எதிர்நோக்கி வரும் இவ்வேளையில், நெருக்கடியை வெற்றிகரமாக சமாளித்து நாட்டை சுபீட்சத்திற்கு இட்டுச் செல்வதற்கும், தேவையான சீர்திருத்த செயல்முறையுடன் நீடித்த தேசிய நல்லிணக்கப் பாதையில் இறங்குவதற்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாக ஐரோப்பிய

06

## பாதாள உலக முக்கிய புள்ளியான

# பெத்தியகொட சங்க முல்லேரியாவில் கைது



போதைப்பொருள் கடத்தல்காரரும் பாதாள உலக செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தவருமான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான “பெத்தியகொட சங்க” என்றழைக்கப்படும் லியனகே ஹர்ஷ சதுரங்க பெரேரா என்பவருடன் மற்றும் இருவர் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் முல்லேரியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து, ரி54 ரக துப்பாக்கி, 5 துப்பாக்கி தோட்டாக்கள் மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் ஆகியவற்றையும் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

06

## தனது முதலாவது பொது நிகழ்வாக

# இலங்கை சமூகத்தினரை சந்திக்கும் மன்னர் சார்ல்ஸ்



பிரித்தானிய மன்னர் சார்ல்ஸ் தனது முதல் பொது நிகழ்வாக பிரித்தானியாவை தளமாகக் கொண்ட இலங்கை சமூகத்தை சந்திக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. மன்னர் சார்ல்ஸின் பதவியேற்பின் பின்னர் இங்கிலாந்து முழுவதும் வாழும் தெற்காசிய சமூகத்தினருக்கு ஸ்கொட்லாந்தில் உள்ள எடின்பர்க்கில் வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

06

## எதிர்வரும் 05ஆம் திகதி முதல்

# Gas விலை மீண்டும் குறைக்கப்படுகிறது

## லிட்ரோ நிறுவன தலைவர் அறிவிப்பு



லிட்ரோ உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை மீண்டும் குறைக்கப்படும் என லிற்றோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.அந்தவகையில் நாளை 05ஆம் திகதி நள்ளிரவு முதல் இது நடைமுறைக்கு

06

## ரயிலில் பயணச்சீட்டின்றி பயணம்;

# கொம்பனி வீதியில் 129 பேருக்கு அபராதம்



கடந்த மாதம் 08ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை கொம்பனி வீதி புகையிரத நிலையத்தின் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட ரயில் பயணச்சீட்டு பரிசோதனையின்போது டிக்கட் இன்றி ரயிலில் பயணித்த 129 பேர் கைது செய்யப்பட்டனர்.

06

# யாழ்.பல்கலைக்கழகத்துக்கு சீனத்தூதரகத்தினால் நிதியுதவி

**கோப்பாய் குறூப் நிருபர்**



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் நலச்சேவைகளுக்கென சீனத்தூதரகத்தினால் ரூபா 43 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சீனத்தூதுவர் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இந்த நிதியுதவியை நேற்றுமுன்தினம் (02) பிற்பகல் 4.00 மணியளவில் கொழும்பிலுள்ள சீனத்தூதரகத்தில் வைத்து இலங்கைக்கான சீனத்தூதுவர் சி சென்ஹொங் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் சீனத்தூதுவரின் முதற் செயலாளர் லீ ஜிங்ரே, யாழ். பல்கலைக்கழக மாணவர் நலச்சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி.ராஜ்உமேஸ், சீனத்தூதுவர் நிதியுதவிக்கான யாழ். பல்கலைக்கழக இணைப்பாளர் கலாநிதி மு.தணிகைச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர். 2016 ஆம் ஆண்டு முதல் இலங்கையிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு சீனத்தூதுவரின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் நிதியுதவி பங்கிட்டு வழங்கப்பட்டு வந்தது. 2022 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும், கிழக்கு பல்கலைக்கழகத்துக்கும் மட்டுமே முழுத் தொகையும் பங்கிட்டு வழங்கப்பட்டது.

சீனத் தூதரகத்தின் நிதியுதவியின் கீழ் மாணவர்களுக்கான மாதாந்த உதவிப்பணம் உட்பட பல நலனோம்புச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக நலச்சேவைகள் பிரிவு அறிவித்துள்ளது.

# பொலிகண்டியில் கஞ்சா மீட்பு



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் பொலிகண்டி கடற்கரையில் 217 கிலோகிராம் கேரள கஞ்சா நேற்றைய தினம் திங்கட்கிழமை அதிகாலை இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

பொலிகண்டியிலுள்ள மீனவர்கள் வாடிக்கு அருகில் கஞ்சா பொதிகள் காணப்படுவதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் அவ்விடத்திற்கு விரைந்த இராணுவத்தினர் அவற்றை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் இராணுவத்தினர் ஒப்படைத்துள்ளனர்.

# யாழ்.பல்கலை மாணவர்கள் மீது மது போதையில் வந்த கும்பல் தாக்குதல்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் மீது மதுபோதையில் வந்த கும்பலொன்று தாக்குதல் நடாத்தி விட்டு தப்பி சென்றுள்ளனர். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு முன்பாக உள்ள வீதி வழியாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்று கொண்டிருந்த நான்கு பல்கலைக்கழக மாணவர்கள் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டி ஒன்றில் மதுபோதையில் வந்த நான்கு பேர் கொண்ட குழுவே மாணவர்களை வழிமறித்து தாக்கி விட்டு அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த இரு மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முறிகண்டி பகுதியில் விபத்து – இருவர் காயம்

**பரந்தன் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டி பகுதியில் A9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்து நேற்று காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. உணவகம் ஒன்றிலிருந்து ஏ 9 வீதியை கடந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன், அதே திசையில் நேராக பயணித்த கார் மோதியுள்ளது. விபத்தின் போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து சம்பவத்தில், மோட்டார் சைக்கிள் மற்றும் கார் ஆகியன பலத்த சேதங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ். பல்கலையில் பரீட்சை நடத்த தவறியமை; துறைத்தலைவர் உள்ளிட்ட மூவர் பணி இடைநீக்கம்

**யாழ்.விசேட நிருபர்**

பரீட்சை கடமைகளிலிருந்து தவறிய குற்றச்சாட்டுக்காக விசாரணைகள் முடிவடையும் வரை யாழ்ப்பாண பல்கலைகழக துறைத் தலைவர், விரிவுரையாளர் மற்றும் நிர்வாக உத்தியோகஸ்தர் ஆகிய மூவரையும் பல்கலைக்கழக பேரவை பணிஇடை நீக்கம் செய்துள்ளது.

யாழ். பல்கலை கழகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பேரவை கூட்டத்தின் போதே மூவரையும் விசாரணைகள் முடிவடையும் வரை பணி இடைநீக்கம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

கடந்த மாதம் கலைப்பீட மாணவர்களின் ஒரு துறைக்கான பரீட்சைக்கு வினாத்தாளை தயார் செய்யாத காரணத்தால், பரீட்சைக்கு தோற்ற தயாரான நிலையில் இருந்த மாணவர்கள், பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலையில் திரும்பி சென்று இருந்தனர்.

இதுதொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் பல்கலைகழக மூதவையினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு, மூதவையின் பரிந்துரையின் அடிப்படையில் பேரவை அதுதொடர்பில் பரிசீலித்து முறையான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக மூவரையும் விசாரணைகள் முடிவடையும் வரையில் பணி இடைநீக்கம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, மாணவர்களுக்கான வினாத்தாளினை தயார் செய்யாது, துறைத்தலைவர் விரிவுரையாளரையும், விரிவுரையாளர் துறைத் தலைவரையும் மாறி மாறி கை காட்டியுள்ளனர். அதனால் இறுதி வரை வினாத்தாள் தயார் செய்யப்படவில்லை. பரீட்சை வினாத்தாள் தயார் செய்யாது, பரீட்சை கடமையிலிருந்து தவறியதாக துறைத்தலைவர் மற்றும் விரிவுரையாளர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான வினாத்தாள் தயார் செய்யப்படாமை, பரீட்சை நடைபெறாமை ஆகியவை தொடர்பில் நிர்வாக அதிகாரி உரிய தரப்புகளுக்கு உரிய முறையில் அறிவிக்கவில்லையென குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



"போதை அற்ற பாதையை அமைப்போம்" எனும் தொனிப்பொருளில் பெற்றோருக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலான துண்டுப்பிரசுரங்கள் வழங்கும் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆரோக்கியத்திற்கான இளையோர் அமைப்பினரால், யாழ்.நகர் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையங்களை அண்மித்த பகுதிகளில் பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடன் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. சிறுவர் தினத்தினை முன்னிட்டு நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் ஊடாக 50 ஆயிரம் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

படம்: யாழ்.விசேட நிருபர்

# நாகதம்பிரான் ஆலய அலங்கார உற்சவ திருவிழா

**நாகர்கோவில் விஷேட கரவெட்டி நிருபர்கள்**

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய அலங்கார உற்சவ திருவிழா இன்று 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் திருவிழா இடம்பெறும். அந்தவகையில் ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாம்பு திருவிழாவும், 10ஆம் திகதி திங்கட்கிழமை கப்பல் திருவிழாவும், 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழாவும், 12ஆம் திகதி புதன்கிழமை சப்பர திருவிழாவும், 13 ஆம் திகதி வியாழக்கிழமை சமுத்திர தீர்த்தமும், 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை பட்டு தீர்த்தமும் இடம்பெறும்.

# சிறுவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை

## நன்னடத்தை உத்தியோகத்தர் ஜே.ஒஸ்மன் குலாஸ்

**தலைமன்னார் விஷேட நிருபர்**

சிறுவர்களை இலக்கு வைத்து போதைப்பொருட்கள் சமூகத்தில் விதைக்கப்பட்டு வருகின்றன. வீட்டிலும் வெளியிலும் பிள்ளைகளின் உரிமைகளை நாம் மறுக்காது அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் செவிமடுக்க வேண்டுமென மன்னார் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஜே.ஒஸ்மன் குலாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

பேசாலையில் சிறுவர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சிறுவர்கள் தாங்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளையும் நாளாந்தம் அவர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்களையும் தங்கள் குரல்களினாலேயே தங்கள் பெற்றோர்களுக்கு பெரியோர்களுக்கு தெரியப்படுத்தினர். எமது அரசும் பல்வேறுபட்ட வழிமுறைகளை கையாண்டு சிறுவர் பாதுகாப்புத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. பேசாலை பகுதிக்கு அயல் கிராமத்திலிருந்து விநியோகிக்கப்படும் போதைப்பொருட்களால் பாதிப்புகள் ஏற்பட்டுவருகின்றன. இதனால் சிறுவர்களின் குரலாக எங்களை போதையிலிருந்து விடுவியுங்கள் எங்கள் சிறகுளை உடைக்காதீர்கள் நாங்கள் சிறகடித்து பறக்க துடிக்கும் வண்ணாத்தி பூச்சிகள் என்ற வாசகம் காணப்படுகின்றது.

ஆகவே எங்களை போதைப்பொருள் பாவனை போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளினால் சிறுவர்களின் வாழ்வை நாசமாக்காதீர்கள்.

சிறு வயதில் மகிழ்ச்சிகரமாக வாழ வழி சமைத்து தாருங்கள் என சின்னஞ் சிறுவர்கள் பெரியோர்களிடம் பெற்றோரிடம் வேண்டி நிற்கின்றனர் என அவர் தெரிவித்தார்.

# சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு துணைபோகும் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

## முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்துக்கு முன்பாக மீனவர்கள் தொடர் போராட்டம்

**மாங்குளம் குறூப் நிருபர்**



சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு துணைபோகும் அதிகாரிகளை இடமாற்றம் செய்யுமாறு வலியுறுத்தி முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகம் முன்னாக மீனவர்களால் தொடர் போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு துணை போகும் அதிகாரிகளை மாற்றுமாறு கோரி முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தை நேற்று காலை முற்றுகையிட்ட மீனவர்கள் தமக்கான தீர்வு கிடைக்கும் வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடபோவதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீனவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எரிபொருள் கிடைக்காமையால் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் தொழிலுக்கு சென்று வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் கடலில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தொழிலுக்கு செல்லும் மீனவர்களான தமது நிலைமையை புரிந்து கொள்ளாத அதிகாரிகள் சட்டவிரோத தொழிலுக்கு உடந்தையாகவுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# பளையில் பாம்புக்கடிக்கு இலக்கான பெண் மரணம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

பாம்புக் கடிக்கு இலக்கான பெண் ஒருவர் நேற்று திங்கட்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். பளை இந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 67 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 3 தினங்களுக்கு முன்பாக பாம்புக் கடிக்கு இலக்காகி பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும் அவர் வழியில் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.





மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2022 ஆண்டுக்கான வாணிவிழா நிகழ்வானது நேற்று திங்கட்கிழமை (3) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலக நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் வாணிவிழா பூஜையும் அதனை தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இறுவட்டு வெளியீட்டு விழா

**கரவெட்டி தினகரன் நிருபர்**

நெல்லை தாங்கி சிறுவர் கவிநயப் பாடல்கள், கர்நாடக சங்கீத செயன்முறை பாடல்களைக் கொண்ட இருவட்டு வெளியீட்டு விழா எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் ஆ சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பணியாளர் செ.உதயகுமாரும் கௌரவ விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலகர் இ.தயாரூபனும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய கல்வி பணியாளர் ச.சத்தியபாலனும் கலந்து கொள்வார்கள்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஒக்டோபர் 4 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்



தொழுகை நேரம்
03 முதல் 06 வரை
சுபஹ் - 04.43
லுஹர் - 12.01
அஸர் - 03.16
மஃரிப் - 06.01
இஷா - 07.11

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் புரட்டாசி 17
ராகுகாலம் : பகல் : 3.00 - 4.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: திதித்துவயம்

## வலம்புரி கவிதா வட்ட 80 ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 80 ஆவது கவிய ரங்கு எதிர்வரும் 09ஆம் திகதி ஞாயிறுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு, பழைய நகர மண்டபத்தில் கவிதாயினி ஆர். பி. யசோதரை தலைமையில் கவியரங்கு நடைபெறும்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழ கணேஷ் (பொருளாளர்) 071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்.

# நடைமுறை விலைச் சூத்திரத்தின் படி டீசலின் விலையை குறைக்க முடியாது

### மானியம் போன்ற தீர்மானங்களை நிதியமைச்சே மேற்கொள்ள வேண்டும்



### சபையில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நடைமுறையில் உள்ள விலைச் சூத்திரத்தின் படி டீசலின் விலையை குறைக்க முடியாது எனவும் அதற்கான தீர்மானத்தை நிதியமைச்சே மேற்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பெற்றோல் விலை குறைக்கப்பட்டாலும் டீசலின் விலையை உடனடியாக குறைக்க முடியாது என தெரிவித்த அவர்,

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைவடைந்தாலும் தேசிய மட்டத்தில் எரிபொருள் விலையை

04

# மாணவர்களுக்கு கஞ்சி வழங்கும் நடவடிக்கை

நேற்று முதல்கட்டமாக 1000 பாடசாலைகளில் பாடசாலை மாணவர்களுக்கு கஞ்சி பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் நேற்று முதல் அனைத்து பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

முதல்கட்டமாக ஆயிரம் பாடசாலைகளில் இவ்வாறு கஞ்சி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.



பாடசாலை மாணவர்களின் போஷாக்கு மட்டத்தினை அதிகரிப்பதற்காக கஞ்சி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

# யாழில் வாள் வெட்டு சந்தேக நபர் கைது

### CID பொலிஸாரிடம் நேற்று சிக்கினர்



யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக வாள் வெட்டு வன்முறையில் ஈடுபட்டு வந்த கும்பலின் முதன்மை சந்தேக நபர் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


தாவடியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப் பட்டுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

மானிப்பாயில் அண்மையில் இருவேறு வீடுகளுக்குள் புகுந்து பெறுமதியான பொருள்களை அடித்துச் சேதப்படுத்தியமை, கடந்த வருடம் அரியாலை மற்றும் பளையில் வீடுகளுக்குள் புகுந்து அட்டூழியத்தில் ஈடுபட்டமை தொடர்பில் கைது செய்யப் பட்ட இளைஞன்

04



கலாநிதி சுபாஷினி பத்மநாதனின் இணைய நேரடி ஒளிபரப்பு விரிவுரை மற்றும் பக்தி நடனம் நேற்று (3) மாலை 6.30 மணிக்கு சுவாமி விவேகானந்த கலாசார மையம் (SVCC) இல் நடைபெற்றது.



காலஞ்சென்ற திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன்,சிரேஷ்ட சட்டதரணி ராஜ குலந்திரா ஆகியோருக்கான நினைவேந்தல் நிகழ்வொன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் "புதிய வெளிச்சங்கள் இலக்கிய மையம்" கொழும்பு ,வெள்ளவத்தை, தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில், கலாநிதி எம்.ஏ. எம். சுக்ரி , மணிப் புலவர் மருதூர் ஏ மஜீத் அரங்கில் ஞாயிற்றுக் கிழமை (2) நடத்திய போது பிடிக்கப்பட்ட படங்கள்.

## ரஜ்கம பிரதேச சபை

### 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

**ரஜ்கம பிரதேச சபைக்கு தேவையான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள்/உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தக்காரர்கள்/விநியோகத்தர்களிடமிருந்து இந்த சபைக்கு விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.**

01. விண்ணப்பப் படிவங்களை பின்வரும் மாதிரிக்கு அமைவாக தயாரித்து 2022.12.30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் அல்லது பதிவுத் தபாலில் செயலாளர், ரஜ்கம பிரதேச சபை, ரஜ்கம எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
02. ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைக்காகவும் வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உரித்துடைய கட்டணத்தை ரஜ்கம பிரதேச சபை, ரஜ்கம எனும் பெயரில் ரொக்கப் பணமாக அல்லது காசுக் கட்டளை மூலம் செலுத்தலாம்.
04. தேவையான சந்தர்ப்பங்களில் பதிவு செய்துள்ள வழங்குநர்களை விடுத்து வேறு விண்ணப்பதாரர்களிடமிருந்தும் வழங்கல் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
05. கட்டளையிடப்படும் திகதி முதல் 07 நாட்களுக்குள் பொருட்களை கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும். வழங்கல் மற்றும் சேவைகளின் விலைகள் 06 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.
06. பதிவு செய்துள்ள வழங்குநர்கள் விலை கோரும் நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்படாத நபர்களின் பெயர்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதிவேட்டிலிருந்து அகற்றப்படும்.
07. இதற்கு முன்னர் கட்டளைகளை திருப்திகரமாக பூர்த்தி செய்ய முடியாமல் போனவர்கள் அல்லது பதிவேட்டிலிருந்து பெயர் அகற்றப்பட்டவர்களின் வேண்டுகோள் நிராகரிக்கப்படும்.
08. பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்கு முன்னர் முற்பணம் செலுத்தப்படமாட்டாது.
09. அனைத்து பொருட்களையும் வழங்கும் போது அலுவலகத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.
10. வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் உரித்துடைய நியமக் குறியீடுகளுக்கு அமைவானதென உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மட்டுமே கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.
11. இது தொடர்பான மேலதிக விபரங்களை 091-2267576 எனும் தொலைபேசி இலக்கம் மூலம் வழங்கல் அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**டி. நிமல்**
**தலைவர்,**
**ரஜ்கம பிரதேச சபை, ரஜ்கம.**
**2022-09-22**

**2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல் உருப்படி அட்டவணை**
**ரஜ்கம பிரதேச சபை**

| தொ. இலக்கம் | வழங்கல் உருப்படி | பதிவுக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 01 | காகிதாதிகள் மற்றும் டோனர் வகைகள் | 1000.00 |
| 02 | அச்சிடல் வேலைகள் | 1000.00 |
| 03. | அலுவலக உபகரணங்கள், கணனி மற்றும் மரத்தளபாடங்கள், கடிதக் கோவை கெபினட், தட்டச்சுப்பொறி, புகைப்படப்பிரதி இயந்திரம், அச்சுப்பொறி ஆகியவை | 1000.00 |
| 04 | சீருடை தைத்தல் மற்றும் சீருடைத் துணிகள், பாதணிகள் வழங்கல் | 1000.00 |
| 05 | மரம் (பறாலை, ரீப்பை) | 1000.00 |
| 06 | கட்டிடப் பொருட்கள்( சீமெந்து, மணல், செங்கல், சக்கைக் கல்.) | 1000.00 |
| 07 | துப்புரவேற்பாட்டு உபகரணங்கள், (தும்புத்தடி, விளக்குமாறு, கிருமிநாசினி, கையுறை, தலைக்கவசம்) | 1000.00 |
| 08 | தார் மற்றும் பிரிமிக்ஸ் | 1000.00 |
| 09 | மோட்டார் வாகனம் மற்றும் உதிரிப்பாகங்கள் | 1000.00 |
| 10 | நூலக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள், மற்றும் பத்திரிகைகள் | 1000.00 |
| 11 | மின்சார உபகரணங்கள் மற்றும் கருவிகள் | 1000.00 |
| 12 | ஆயுர்வேத மருந்து வகைகள் | 1000.00 |
| 13 | வாகனங்கள் மற்றும் விலங்குகள் அனுமதிக் கட்டணம் | 1000.00 |
| 14 | டயர், ரியுப், மற்றும் பெட்டறி. | 1000.00 |
| 15 | ஞாபகச் சின்னம் வழங்குதல் | 1000.00 |
| 16 | விவசாய உபகரணங்கள் (மண்வெட்டி, கடப்பாறை, கத்தி, வீச்சுக் கத்தி, சவல் மற்றும் புல் நாசினி) | 1000.00 |
| 17 | வீட்டு வளிச்சீராக்கி இயந்திரம் | 1000.00 |
| 18 | பெயர்ப் பலகை, இலச்சினை மற்றும் பெனர் வரைதல் | 1000.00 |
| | சேவைகள் | |
| 19 | வாகன திருத்தவேலைகள் (வாகன மின்சார அமைப்பு வளிச்சீராக்கி, நிறப் பூச்சு பூசுதல்) | 1000.00 |
| 20 | வாகனங்கள் சேவை செய்தல் | 1000.00 |
| 21 | அலுவலக உபகரண திருத்தவேலைகள் கணனி மற்றும் மரத் தளபாடங்கள் கோவைக் கெபினட்டு, புகைப்படப் பிரதி இயந்திரம், அச்சுப்பொறி ஆகியன | 1000.00 |
| 22 | கல் உருளை வழங்கல் | 1000.00 |
| 23 | எரிவாயு வழங்கல் | 1000.00 |
| 24 | நில அளவை நடவடிக்கைகள், காப்புறுதி நடவடிக்கைகள், நில அளவையாளர், சட்டத்தரணி, மொழி பெயர்ப்பு | 1000.00 |
| 25 | ஒலிபெருக்கி இயந்திரம், கூடாரம், கதிரை, உற்சவ பண்டங்கள் | 1000.00 |
| 26 | பிரதேச சபையில் அனைத்து நிர்மாண வேலைகள், வீதி அமைத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக ICTAD பதிவு மற்றும் அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்தல். | 1500.00 |
| 27 | தொற்று நீக்கல் நடவடிக்கைகளிற்காக பாவிக்கப்படும் பாதுகாப்பு உடைகள் | 1500.00 |
| 28 | துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் (தொற்றுநீக்கிகள், கைகழுவும் திரவம்) | 1500.00 |

**பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்.**

01. வியாபாரத்தின் பெயர்/விண்ணப்பதாரரின் பெயர்:........................................
02. வியாபாரத்தின் தன்மை :........................................
03. பதிவிலக்கம் மற்றும் திகதி:........................................
(வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்.
04. தொலைபேசி இலக்கம்:........................................
05. வங்கியாளரின் பெயர் மற்றும் கணக்கிலக்கம்: :........................................
06. விண்ணப்பிக்கும் உருப்படி:........................................
07. வியாபாரத்தின் பெயர்: :........................................
08. முன்னர் வழங்கல்கள்/சேவைகள்/ஒப்பந்தம் செய்த நிறுவனம் பற்றிய விபரம்: ........................
09. கடன் வசதிகள் பற்றிய விபரம்:........................................
10. ஏனைய விடயங்கள்: ........................................
11. வெட் இலக்கம்: ........................................
(வெட் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று இணைத்தல் வேண்டும்.)

**திகதி:..................................** ..................................
**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

## தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை
**(கைத்தொழில் அமைச்சு)**

### பெறுமதியான இரத்தினக்கல் காணிக்காக விலைமனுக்கள் கோரல்

**கேகாலை மாவட்டம்**
**நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான**
**தல்துவ - பந்தயத்திடலுக்கு அண்மையில் கொலேபொக்க காணியின் பெறுமதியான 02 காணித் துண்டுகள்**
**(காணித்துண்டு இல. 666/A)**
**ஒரு வருட காலத்திற்கு இரத்தினக்கல் அகழும் உரிமையை வழங்குவதற்காக**
**விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

இயைபுடைய விலைமனுப் படிவங்கள் / நிபந்தனைப் படிவங்களை 2022-09-30ஆம் திகதி முதல் அலுவலக நேரத்தினுள் அதிகார சபையின் எஹலியகொட பிராந்திய அலுவலகத்தில் மற்றும் கொழும்பு தலைமை அலுவலகத்திலிருந்து 5000.00 ரூபா + (15% VAT) பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

- விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் - 2022-10-06ஆம் திகதி பி.ப. 12.30 மணி வரை எஹலியகொட பிரதேச சபை அலுவலகத்தில்
- விலைமனுக்கள் திறக்கப்படுதல் - 2022-10-06ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு அதே இடத்தில் இடம்பெறும்.

**நிபந்தனைகள்:**

1. முழுத் தொகையையும் அவ்வேளையிலேயே செலுத்துதல் வேண்டும் (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)
2. இந்தக் காணியினுள் இயந்திராதிகள் அல்லது தொட்டிகளைப் பயன்படுத்தி இரத்தினக்கல் படுகைகளை கழுவுவதற்கான அனுமதி இல்லை என்பதுடன் அகழும் வட்டியின் மூலம் அகழ்தலை மேற்கொள்ளலாம். செயல்முறை மற்றும் தொழில்நுட்ப நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு தேவையான வகையில் படுகைகளை போக்குவரத்து செய்வதற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. ஒரு காணித் துண்டுக்கு மீளளிக்கப்படும் பாதுகாப்புப் பிணையாக 200,000.00 ரூபாவை வைப்புச் செய்தல் வேண்டும்.
4. விலைக்கோரல் தொகைக்கு மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் 11,000.00 ரூபாவுக்கு 15% VAT வரி செலுத்துதல் வேண்டும்.
5. முத்திரைக் கட்டணமாக 1100.00 ரூபா செலுத்துதல் வேண்டும்.

**மேலதிக விபரங்கள் மற்றும் காணித்துண்டு பிரதிகளைப் பார்ப்பதற்கு விசாரணை:**

| | |
|---|---|
| பணிப்பாளர் (காணி/அகழ்வு/சுற்றாடல்) | 011-2332111 / 071-6845296 |
| பிரதிப் பணிப்பாளர் (செயற்பாடுகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி) எஹலியகொட | 036-2258170 / 071-6845298 |
| பிரதிப் பணிப்பாளர் (செயற்பாடுகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி) இரத்தினபுரி | 045-2222159 / 071-5362547 |
| பிரதிப் பணிப்பாளர் (செயற்பாடுகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி) நாஉல | 066-2246094 / 071-5362517 |
| பிரதிப் பணிப்பாளர் (செயற்பாடுகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி) மாத்தறை | 041-2223330 / 071-5362513 |
| பிரதிப் பணிப்பாளர் (செயற்பாடுகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி) மொனராகலை | 055-2276124 /071-5362512 |
| பிரதிப் பணிப்பாளர் (செயற்பாடுகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி) கொழும்பு | 011-2390651 / 071-5362510 |

**தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி**
**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை,**
**இல. 12, மெக்சன்ஸ் கோபுரம், அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 03.**
**தொலைபேசி: 0112329295 / 2325364 / 2390645-8 தொலைநகல்: 0112320758**
இணையதளம்: www.ngja.gov.lk

திகதி 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4896
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,919,840.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 0 5 7 9 6 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.19,629,455.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 205
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,363,580.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 15 26 27 44
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,747,936.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1351
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,490,220.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 6 0 5 5 8 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,314,914.80

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3138
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,420,360.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 09 37 46 49
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,045,775.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 926
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,904,320.00
வெற்றி இலக்கினம் C வெற்றி இலக்கங்கள் 06 17 42 50
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 128,166,058.80

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1244
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,733,720.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.273,345,498.00
ஆங்கில எழுத்து Z சுப்பர் நம்பர் 01 வெற்றி எண்கள் 08 37 54 57
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கடிதம் எழுதி விட்டு காணாமல்போன பேராதனை பல்கலையின் மற்றுமொரு மாணவன்!

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் நான்காம் வருட மாணவர் ஒருவர் நேற்று முன்தினம் (2) முதல் காணாமல் போயுள்ளதாக பேராதனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்த குறித்த மாணவி நேற்று இரவு 8.00 மணியளவில் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# பாடசாலை மாணவர்களுக்கு ஜனவரியில் சீருடை

## சபையில் அமைச்சர் சுசில்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

2023ஆம் ஆண்டுக்காக மாணவர்களுக்கு வழங்குவதற்கு 39.5 மில்லியன் பாடப்புத்தகங்களை அச்சிட வேண்டியுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாடசாலை மாணவர்களுக்கான சீருடை தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சபையில் தெரிவித்த அவர், எதிர்வரும் ஜனவரி மாதளமவில் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளை விநியோகிக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். பாராளுமன்றில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்களின் போது மிலான் ஜயதிலக்க எம். பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அடுத்த ஆண்டுக்காக 39.5 மில்லியன் பாட ப்புத்தகங்கள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் 45 சதவீத பாட புத்தகங்களை இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் கடதாசி மற்றும் மூலப் பொருள் இறக்குமதி ஊடாக அரசாங்க அச்சக திணைக்களத்தின் ஊடாக அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதியான 55 சதவீதமான புத்தகங்களை அச்சிட தேசிய பெறுகை ஊடாக திறந்த மனுகோரல் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய குறுகிய காலத்திற்குள் பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டு துரிதமாக விநியோகிக்கப்படும். பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் தொடர்பில் தெரிவித்த அவர்,சீனாவிடமிருந்து பொதி செய்யப்பட்ட 70 சதவீதமான சீருடைகளை பெற்றுக்கொள்ள இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.மிகுதி 30 சதவீதமான சீருடைகளை தேசிய ரீதியில் உற்பத்தி செய்ய 1900 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மின் கம்பத்துடன் மோதி கார் ஒன்று விபத்தில்!

## நால்வர் ஆஸ்பத்திரியில் அனுமதி



பண்டாரகம – கெஸ்பேவ வீதியில் அலோதியாவ பிரதேசத்தில் காரொன்று வீதியை விட்டு விலகி உயர் மின் கம்பத்துடன் மோதியதில் கார் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சாரதி உட்பட நால்வர் படுகாயமடைந்ததுடன் அவர்கள் அனைவரும் 1990 சுவசெரிய நோயாளர் அம்பியூலன்ஸ் வண்டி மூலம் பண்டாரகம மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தான நிகழ்வொன்றில் கலந்து கொண்ட சிலரை அழைத்துக் கொண்டு பண்டாரகமவில் இருந்து கெஸ்பேவ நோக்கி சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் வாகனம் மோதியதில் உயர் மின் கம்பம் பல பகுதிகளாக உடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் மோட்டார் வாகனம் முன்பகுதி பலத்த சேதமடைந்துள்ளதுடன் சாரதிக்கு வந்த நித்திரையே விபத்துக்கு காரணமென பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் காரணமாக உடைந்த மின்கம்பத்தை அகற்றி அதனை சீரமைக்கும் பணிகளால் பிரதேசத்தில் பல மணிநேரம் மின்சாரம் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மறைந்த நடிகர் தர்ஷன் தர்மராஜின்...

அவரது பூதவுடல் தற்போது பொரளை தனியார் மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, இறக்குவானை பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட அவர், திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிட்னி சந்திரசேகர என்பவரினால் 2008 ஆம் ஆண்டு இயக்கப்பட்ட சிங்கள சின்னத்திரை நாடகமான ஏ9 மூலம் தர்ஷன் தர்மராஜ் அறிமுகமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடுத்த வருட முற்பகுதியில் 8,000...

திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். கல்வியியற் கல்லூரிகள் 1986 ஆம் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. அதன் மூலம் முதலாம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரையிலான திறமை படைத்த பயிற்சி ஆசிரியர்களைப் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களின் அடிப்படையில் அவ்வாறு 8000 பேருக்கு பரீட்சைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் அடுத்த வருடம் முதல் பகுதியில் அந்த 8000 பேரையும் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பல்கலைக்கழக அனுமதிக்கு 93,000...

மாணவர்களை இணைத்துக் கொள்ளவுள்ளதுடன் பொறியியல் பீடத்திற்கு 2,238 மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

2021ஆம் ஆண்டின் உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய 171,497 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நெருக்கடிக்கு தீர்வு காண...

ஆணைக்குழு தலைவர் உர்சுலா வொன் டர் லென் (Ursula Von Der Leyen) தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதை முன்னிட்டு விடுத்துள்ள விசேட வாழ்த்துச் செய்தியிலேயே ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் செயற்பாட்டில் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல் மற்றும் அனைத்து பங்குதாரர்களுக்கும் இடையிலான உரையாடல் மற்றும் சட்டத்தின் ஆட்சி மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிப்பது அவசியமானது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பெத்தியகொட சங்க...

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், பெத்தியகொட சங்கவை நவநகர பிரதேசத்தில் வைத்து கைது செய்து விசாரணைக்குட்படுத்தியபோது, அவரினால் பயன்படுத்தப்பட்ட துப்பா க்கி பரகடுவ பிரதேசத்தில் இருவருக்கு வழங்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இந்த நிலையில் இருவரும் துப்பாக்கியு டன் எஹலியகொட இரத்தினபுரி வீதியில் முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தபோது கல்புஸ்ஸெல்ல தோட்டத்துக்கு அண்மித்ததாக கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## இலங்கை சமூகத்தினரை...

இதன்போது இலங்கை உட்பட பல தெற்காசிய நாடுகளுடன் தொடர்புள்ளவர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் இங்கிலாந்து முழுவதிலுமிருந்து பிரித்தானியாவை தளமாகக் கொண்ட இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நேபாளம், பூட்டான் மற்றும் மாலைத்தீவு பாரம்பரியத்தைச் சேர்ந்த 200300 விருந்தினர்கள் பங்கேற்பார்கள் என பிரித்தானிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. தேசிய சுகாதார சேவை முதல் கலை, ஊடகம், கல்வி, வணிகம் மற்றும் ஆயுதப் படைகள் வரை பிரித்தானிய வாழ்க்கையில் இந்த சமூகங்கள் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிப்பதே இந்த நிகழ்வின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## Gas விலை மீண்டும்...

வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எரிவாயு விலை சூத்திரத்தின்படி, உலக சந்தையில் எரிவாயு விலை மற்றும் இதர செலவுகளுக்கு ஏற்ப இந்த குறைப்பு அமல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது .

## கொம்பனி வீதியில் 129...

கொம்பனி வீதி புகையிரத நிலையத்தில் இரண்டு வெளியேறல் வாயில் காணப்படுகிறது.

நீதியரசர் அக்பர் மாவத்தை பக்கம் உள்ள வெளியேறல் வாயிலில் இருந்து மேற்கொண்ட பயணச்சீட்டு பரிசோதனையின் போதே இவர்கள் அகப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து சுமார் நான்கு இலட்சத்து இரண்டாயிரத்து இருநூறு ரூபா குறித்த காலப்பகுதியில் தண்டப்பணமாக அறவிடப்பட்ட பி'ன்னர் விடுவிக்கப்பட்டனர்.

## நடைமுறை விலைச் ... 03ஆம் பக்க தொடர்...

தீர்மானிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

பெற்றோல் இறக்குமதியில் இலாபம் கிடைக்கப் பெற்றதால் விலை குறைக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போதைய நிலையில் டீசலின் விலையை குறைக்க முடியாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்களின் போது எதிர்க்கட்சி எம்.பி காமினி வலபொட எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

நாட்டில் எரிபொருள் விநியோக கட்டமைப்பில் சிக்கல் காணப்படுகிறது என்பதை அனைவரும் அறிவர். மட்டுப்பாடுகளுக்கமையவே எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. விவசாயத்துறை நடவடிக்கைகளுக்கு திட்டமிட்ட வகையில் 70 சதவீதமளவில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவுகளின் ஒழுங்கு

படுத்தலுக்கமைய விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றன. மசகு எண்ணெய் ஊடாக மாத்திரம் நாட்டின் ஒட்டுமொத்த எரிபொருள் தேவையினையும் பூர்த்தி செய்ய முடியாது.

மொத்த எரிபொருள் தேவையின் 30 சதவீதமளவு மாத்திரம் தான் மசகு எண்ணெய் சுத்திரகரிப்பு ஊடாக பெற்றுக்கொள்ளப்படுகிறது.

70 சதவீதமளவு எரிபொருள் இறக்குமதி செய்யப்படுகிறது. உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைவடையும் போது தேசிய மட்டத்தில் எரிபொருளின் விலையை குறைக்க முடியாது. டீசல் விநியோகத்தில் இதுவரை காலமும் வழங்கப்பட்ட நிவாரணம் நீக்கப்பட்டுள்ளது.

டீசல் விநியோகத்தின் நிவாரணம் நீக்கப்பட முன்னர் ஒரு லீற்றர் டீசல் விநியோகத்தின் போது 30 ரூபா நட்டத்தை எதிர்கொள்ள நேரிட்டது.

இந்த நிலையில் தற்போது டீசலின் விலையை குறைக்க முடியாது. பெற்றோல் இறக்குமதியில் 70 சதவீத இலாபத்தை பெற்றுக் கொண்டுள்ளதால்பெற்றோல்விலை குறைக்கப்பட்டது.

எதிர்வரும் 14 நாட்களுக்குள் எரிபொருள் விலை திருத்தம் செய்யப்படும் போது தற்போதைய விலையில் திருத்தம் செய்யப்படும் என எதிர்பார்க்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழில் வாள் வெட்டு... 03ஆம் பக்க தொடர்...

தேடப்பட்டு வந்தார். அவருக்கு மோட்டார் சைக்கிள் வழங்கியமை தொடர்பில் ஒருவரும் வன்முறையில் ஈடுபட்ட இருவரும் என மூவர் கடந்த மாதம் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் முதன்மை சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 3 வாள்கள், மோட்டார் சைக்கிள் என்பன சான்றுப்பொருட்களாக கைப்பற்றப்பட்டுள்ளனவென்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் ஐவர் தேடப்படுகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## லேக் ஹவுஸ் நிறுவன காணியை...

நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் அதில் ஒன்றுதான் லேக் ஹவுஸ் நிறுவனமாகும். இந்த கூற்று சமூகத்தில் தற்போது பரவலாக பேசப்பட்டு வருகின்றன. இதனை வெளிநாட்டுக்கு வழங்கி அவர்கள் புனரமைப்பதை விட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை அரசாங்கமே புனரமைத்து மேம்படுத்த முடியும் என தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,பத்திரிகைகளின் தாய் வீடான லேக்ஹவுஸ் நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் கடந்த அரசாங்கத்தின் காலத்திலோ அல்லது தற்போதைய அரசாங்கத்தினாலோ அதனை தனியாருக்கு அல்லது வெளிநாடொன்றுக்கு விற்பதற்கு எந்த வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை.

ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான மேற்படி காணியை 99 வருட குத்தகைக்கு டி .ஆர் விஜேவர்தன பெற்றுள்ள நிலையில்

அந்த குத்தகைக் காலம் நிறைவுற்றுள்ள நிலையில் அதனை அவரால் ஸ்தாபிக்கப்பட்ட லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கே மீண்டும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான அந்த காணியை மீண்டும் ரயில்வே திணைக்களத்திற்கு சுவீகரித்துக் கொள்ள முடியும். அவ்வாறு செய்தால் அந்த நிறுவனத்தின் முன்னெடுப்புகளை ரயில்வே திணைக்களத்தின் கீழேயே முன்னெடுக்க வேண்டி வரும். அதனை தவிர்க்கும் வகையிலேயே லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கே மீண்டும் அதனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கோபா குழுவுக்கான...

பாராளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது. அதனையடுத்து பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடையுறாமல் 2022ஆகஸ்ட் 29 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அப் பிரேரணையின்படி அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து

நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாக மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, லசந்த அழகியவன்ன, கே. காதர் மஸ்தான், சுரேன் ராகவன், திருமதி டயனா கமகே , எஸ். பி. திசாநாயக்க,

திஸ்ஸ அத்தநாயக்க, கபீர் ஹாசீம், சரத் வீரசேகர, விமலவீர திசாநாயக்க, நிரோஷன் பெரேரா, திருமதி சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே, ஜே.சீ. அலவத்துவல, அசோக அபேசிங்ஹ, புத்திக பத்திரண, ஜயந்த சமரவீர, ஹெக்டர் அப்புஹாமி, ஹேஷா விதானகே, மேஜர் பிரதீப் உந்துகொட, இசுரு தொடன்கொட , வசந்த யாப்பா பண்டார, சாணக்கியன் இராசமாணிக்கம் , எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப்விதான, டீ. வீரசிங்க, வீரசுமன வீரசிங்ஹ, சரித்த ஹேரத், திருமதி ஹரினி அமரசூரிய ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## மண் சரிவில் சிக்கி...

மூன்று பிள்ளைகளின் தாயொருவர் பத்தனை மவுண்ட்வேர்ணன் மேற்பிரிவு தோட்டத்தில் நேற்று (3) காலை உயிரிழந்துள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று (3) அதிகாலை பெய்த கடும் மழையினால் தனி குடியிருப்புக்கு பின்னால் இருந்த பாரிய மண்மேடொன்று சரிந்து வீட்டின் கூரையின் மீது விழுந்துள்ளது. இதன்போது சமையலறையில் காலை தனது மகளுடன் சமையல் வேலை செய்துக் கொண்டிருந்ததாயின்மீதுவிழுந்ததில் அவர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் பத்தனை மவுண்ட் வேர்ணன் மேற்பிரிவைச் சேர்ந்த ராமசாமி காளியம்மா (வயது 46) என்ற மூன்று பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த அனர்த்தத்தில் குறித்த பெண்ணின் மகள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தற்போது மலையகத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாக தெரிவித்த திம்புள்ள பத்தனை பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அப்பாவிகளான பிள்ளைகளை...

புனர்வாழ்வு செயலகம் தொடர்பான சட்டமூலம் தொடர்பில் வெலிமடையில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே நாமல் எம்.பி இதனை கூறியுள்ளார்.

போராட்டத்தை வழி நடத்தியவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். உதவி, ஒத்தாசைகளை வழங்கியவர்களுக்கு எதிராகவும் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். எனினும் போராட்டம் என்ற அலைக்கு ஏமாந்து சென்ற பல பிள்ளைகள் உட்பட தவறாக வழிநடத்தப்பட்ட பல பிள்ளைகளும் இருக்கின்றனர். அதேபோல், போராட்டத்தை பார்க்கச் சென்ற பலரும் இருக்கின்றனர். இவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பிரயோசனமில்லை. போராட்டம் என்ற அலை காரணமாக அதில் கலந்துக் கொண்ட பிள்ளைகளை வெறுமனே கைது செய்து சிறையில் அடைப்பது பலனளிக்காத விடயம்.

இந்த பிள்ளைகள் வெளிநாடுகளுக்கு வேலைகளுக்கு செல்ல பொலிஸ் அறிக்கைகளை பெற முடியாத நிலைமையை ஏற்படுத்தினால், அது நியாயமானது அல்ல. இதனால், போராட்டத்திற்கு ஏமாந்து வழி தவறிய இளைஞர்களை ஒரு வேலைத்திட்டத்தின் ஊடாக சமூகமயப்படுத்த வேண்டும்.

நாட்டில் சுதந்திரம் இருப்பது போல் நாட்டை பாதுகாப்பான நாடாக மாற்ற வேண்டும். எதிர்க்கட்சித்தலைவர் மீது தாக்குதல் நடத்தியதை நாம் கடந்த காலத்தில் பார்த்தோம். எமது வீடுகளை தீயிட்டால் பரவாயில்லை. ஆனால் எதிர்க்கட்சித் தலைவரையும் தாக்கினர்.

கொள்ளைச் சம்பவங்கள், கொலை சம்பவங்கள் நடைபெற்று வருவதுடன் பாதாள உலக குழுவினர் தலைதூக்கியுள்ளனர். இவற்றை அடக்கி ஒடுக்கவில்லை என்றால் இந்த நாடு என்றுமே பொருளாதார வளர்ச்சியை நோக்கி செல்ல முடியாது. மேலும் தமது வீடு, தமது மனைவியின் வீடு, தமது தந்தையின் வீடு உட்பட வீடுகளுக்கு தீவைக்கும் சம்பவங்களை வழிநடத்திய நபர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார்.

## இன்னும் இரண்டு வாரங்களில்...

அதனை தட்டுப்பாடின்றி குறைந்த விலையில் சந்தைக்குப் பெற்று கொடுக்க முடியும் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ரோஹண பண்டார எம்.பி எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் போதே வர்த்தக அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கோதுமை மாவுக்கு நெருக்கடி காணப்படுகிறது. அதற்குக் காரணம் தேசிய ரீதியில் இரண்டு நிறுவனங்கள் மாத்திரமே 99 வீதமான கோதுமை மாவை உற்பத்தி செய்கின்றன.

அதேவேளை, இந்தியாவிலிருந்தே நூற்றுக்கு 90 வீதமான கோதுமை மா நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டது. எனினும் தற்போது இந்திய அரசாங்கம் கோதுமை மா இறக்குமதிக்கு தடை விதித்துள்ளதால் நாம் துபாய் மற்றும் துருக்கி நாடுகளில் இருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதற்காக சில காலம் எடுத்ததால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இறக்குமதி செய்யப்பட்டுள்ள நூறு கொள்கலன்கள் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. எதிர்வரும் இரண்டு வாரங்களில் குறைந்த விலையில் அதனை சந்தைக்கு வழங்குவதற்கு முடியும்.

எவ்வாறெனினும் பொதி செய்து அதிக விலையில் கோதுமை மா விற்பனை செய்யப்படுவது தொடர்பில் வர்த்தக அமைச்சினால் எதுவும் செய்ய முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்களை பாதுகாப்பது...

தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமிய பவனில் நேற்று (03) பிற்பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர்,

"திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மவுண்டவேர்னன் தோட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவினால் துரதிஷ்டவசமாக ராமசாமி காளியம்மாள் உயிரிழந்துள்ளமை கவலையளிக்கிறது, மண்சரிவு, வெள்ளம் உள்ளிட்ட இயற்கை அழிவுகளில் உயிர்கள் பலியாவதை தடுப்பதற்கும், பாதுகாப்பாக வாழ்வதற்குமான பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இந்த விடயத்தை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதுடன், காணி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ மற்றும் பெருந்தோட்டத் துறை ரமேஷ் பத்திரண ஆகியோரிடமும் தெரிவித்துள்ளேன். இவ்விடயம் தொடர்பில் அவர்களின் அமைச்சுக்கள் விரைந்து செயற்படும் என என்னிடம் உறுதியளித்தனர்.

மண் சரிவு அபாய பகுதிக்குள் 3000 வீடுகள் காணப்படுவதால், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறுகோரி அங்குள்ள மக்களுக்கு பாதுகாப்பான இடங்களில் வாழ்வதற்கான காணிகளை வழங்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். உயிர்போனால் மீண்டும் வராது.

மேலும், போகாவத்தை பாடசாலை அதிபர் ஆசிரியர் தின விழாவுக்காக 300 ரூபாவை செலுத்தாத காரணத்தினால் மாணவியொருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்திவின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளேன்.

பாடசாலையில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளுக்காக பணம் அறவிடுதல் முறையாகாது. இதனைக் காரணம்காட்டி மாணவர்களை அடிப்பதோ, திட்டுவதோ நியாயமானதல்ல.

இவ்வாறான விடயங்கள் உங்களது பாடசாலைகளில் இடம்பெறுமானால், அது குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடமோ அல்லது பொலிஸ் நிலையங்களிலோ முறைப்பாடு செய்யுங்கள். இது சமூகப் பிரச்சினையாகும், இதனை அரசியல்வாதிகள் தலையிட்டு தீர்க்கும் பிரச்சினை அல்ல.

ஒரு சில அதிபர், ஆசிரியர்களின் தவறான செயற்பாடுகள் ஒட்டுமொத்த அதிபர், ஆசிரியர்களுக்கும் அவப் பெயரை ஏற்படுத்திக் கொடுத்து விடுகிறது " என்றார்.

## இறக்குமதியாகும் அரிசியில் எவ்வித...

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் தீங்கை ஏற்படுத்தும் உலோகங்கள் கலந்துள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்ததுடன், விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவும் சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். இதனையடுத்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் மாதிரிகள் பெறப்பட்டு, சர்வதேச அங்கீகாரம் பெற்ற தனியார் ஆய்வுகூடம் ஒன்றுக்கு பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இதன்மூலம் அரிசியில் எவ்வித உலோக பொருட்களும் கலக்கப்படவில்லை என அறிக்கையொன்றின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## தனியார் துறையினர் ஊடாக...

நடத்தியுள்ளதாகவும் தெரிவித்த அவர், அவ்வாறு இறக்குமதி செய்த பின்னர் மீனவர்களுக்கு போதிய ளவு மண்ணெண்ணெயை வழங்க முடியும் என்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் காவிந்த ஜயவர்தன எம்.பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

மீனவர்களின் மண்ணெண்ணெய் பிரச்சினையை தீர்ப்பதற்காக கடந்த வரவு செலவுத் திட்டத்தில் 5000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. அந்த வகையில் கையிருப்பில் உள்ள மண்ணெண்ணெய் முடிந்தளவு பகிர்ந்தளிக்கப்பட்டது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பிரிதொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், நாட்டில் 27,903 மீன்பிடி படகுகள் செயல்படுகின்றன. அவற்றுக்கு கடற்றொழில் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார்த் துறை மூலம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. 94 எரிபொருள் நிலையங்கள் ஊடாக 3 லட்சம் லீட்டர் மண்ணெண்ணெய் இவ்வாறு வழங்கப்பட்டு வருகிறது. அந்த மண்ணெண்ணெய் எந்த விதத்திலும் போதாது. எனினும் அதனை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# செபமாலை மிக சக்தி வாய்ந்த அற்புத ஆயுதம்

## புனித செபமாலை அன்னை திருவிழா ஒக்.-07

அக்டோபர் மாதத்தை செபமாலை மாதமாக திருச்சபை சிறப்பிக்கின்றது. மரியாயின் அன்புப் பிள்ளைகளாகிய நாம் செபமாலையின் மகத்துவத்தை நமக்கு நாமே நினைவுபடுத்தி அதிக விசுவாசத்துடன் செபமாலையை குடும்ப வெற்றிமாலையாகக் கருதி செபிக்க இந்த மாதம் நம் அனைவரையும் அழைக்கிறது.

உங்கள் வீட்டில் குடும்ப செபமாலை சொல்வதுண்டா என்ற கேள்வி அவ்வப்போது, மரியாயின் சேனையைச் சந்திக்கும் போதும் மறையுரை வேளையிலும் குருக்களால் கேட்கப்படுகின்றன. இதற்கு பெரும்பாலானோர் சொல்லும் பதில் இல்லை என்பதே! ஏன் சொல்வதில்லை என்பதற்கும் நம்மிடம் ஏராளமான பதில்கள் இருக்கின்றன.

★ நேரமில்லை சோம்பேறித்தனம்
★ குடும்பத்தார் ஒத்துழைப்பதில்லை
★ இளையோர் ஆர்வம் காட்டுவதில்லை
★ வேலைப்பளு என சாக்கு போக்குகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது..

"செபமாலை மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதமாகும். அதை நம்பிக்கையுடன் பயன்படுத்தினால் ஆச்சரியத்தக்க பலன்களைப் பெற முடியும்" – புனித ஜோஸ் மரிய எஸ்க்ரிவா " செபமாலை கடவுள் நமக்கு கொடுத்த விலைமதிப்பில்லாத புதையல்" புனித லூயிஸ் தெ மோண்டபோர்ட். "செபமாலை செபிக்கும் ஒரு இராணுவத்தை என்னிடத்தில் கொடுங்கள். உலகத்தை நான் ஜெயித்துக் காட்டுவேன்" – புனித 9 ஆம் பத்திநாதர்






மேற்குறிப்பிடப்பட்டுள்ள புனிதர்களின் வார்த்தைகள் அவர்களின் விசுவாசத்தில் ஊற்றெடுத்தவை. இது அவர்களின் வாழ்வின் அனுபவம். இதே வாழ்வு அனுபவத்தை மரியாயின் பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் பெற்றிருக்கிறோம். இந்த விசுவாச அனுபவத்தை மற்றவர்க்கு பறைசாற்றுவோம். குறிப்பாக நமது குடும்பத்தாருக்கு இந்த இறை அனுபவத்தை வழங்குவது அவசியம்.

ஏராளமான வரங்களின் களஞ்சியமாக செபமாலை திகழ்கிறது. செபமாலை செபித்து உடல் உள்ள நலன்கள் பெற்றவர்கள் ஏராளம். வாழ்வின் குழப்பங்கள் தீர்ந்து தெளிவடைந்தவர்கள் ஏராளம். குழந்தை வரம் பெற்றவர்கள், திருமண வரம் பெற்றவர்கள் என செபமாலை செபித்து நலன்களால் நிரப்பப்பெற்றவர்கள் ஏராளமானோர் உள்ளனர். நாமும் பல வரங்களை செபமாலையின் வழியாக தாராளமாகவே பெற்றிருக்கிறோம். நாம் பெற்ற வரங்கள் நமது நம்பிக்கையை ஆழப்படுத்தட்டும். மற்றவர்களின் நம்பிக்கையை வளர்த்தெடுக்க உதவி செய்யட்டும். " மாலுமிகள் கரைசேருவதற்கு விடிவெள்ளி வழிகாட்டுவது போல கிறிஸ்தவர்கள் விண்ணகம் செல்வதற்கு மரியாள் வழிகாட்டுகிறார்" என புனித தாமஸ் அக்குவினாஸ் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு மறைபொருளையும் நம் வாழ்வோடு பொருத்திப் பார்த்து தியானிக்கின்ற போது நம் வாழ்வு செல்லும் பாதை நமக்கு வெட்ட வெளிச்சமாய் நம் கண்களுக்குத் தெரிய வருகின்றது. மேலும் எந்த பாதையில் நாம் பயணிக்க வேண்டும் என்ற தெளிவும் நமக்கு கிடைக்கின்றது.



ஒவ்வொரு நாளும் செபமாலையை அன்புடனும், விசுவாசத்துடனும் செபித்தால் மரியாள் நம்மை அவருடைய மகனின் பாதையில் வழிநடத்திச் செல்வார் என்பது ஜோஸ் மரியா எஸ்க்ரிவா என்ற புனிதையின் கூற்று.

இத்தகைய மேலான வல்லமை மிக்க செபமாலையை குடும்பமாக நாம் செபிக்க, மற்றவர்களை செபிக்க வைக்க இந்த மாதத்தில் உறுதி ஏற்போம். ஒரு நாளைக்கு ஒரு செபமாலை சொன்னவர்கள் அதை இரண்டாகவும், இரண்டு சொல்லிக்கொண்டிருப்பவர்கள் அதை மூன்றாகவும், மூன்று வேளை சொல்பவர்கள் அதை நான்கு வேளையாக மாற்றி அளப்பரிய ஆற்றலை நாம் பெற்று நம்மைச் சார்ந்த நம் குடும்பத்தார், நாம் சந்திக்கும் குடும்பங்கள் நமது சமூகம் மற்றும் நாடும் பெற்றிட செபமாலை அன்னையை மன்றாடுவோம்.

அருட்பணி **பென்சிகர் லூசன்...**

## புதுச்செட்டித்தெரு வியாகுல மாதா ஆலய திருவிழா











கொழும்பு புதுச் செட்டித் தெரு புனித வியாகுல மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா அண்மையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்ட திருவிழா திருப்பலி காட்சிகள்.

(நன்றி : அருட்தந்தை அந்திரேயாஸ் பெர்னாண்டோ)

# இறை நம்பிக்கையே மனித வாழ்வின் மையம்

ஓர் இரவு ஒரு மனிதர் கனவொன்று கண்டார். அந்தக் கனவில் அவர் கடவுளுடன் கடற்கரையோரம் நடந்து கொண்டிருக்க, வானத்தில் அவரது வாழ்க்கையின் சில காட்சிகள் மின்னல் போல வந்து சென்றன.

ஒவ்வொரு காட்சியிலும் மணலில் இரண்டு ஜோடி காலடி சுவடுகளைக் கவனித்தார் அந்த மனிதர். ஒன்று அவருடையது. மற்றொன்று கடவுளின் காலடிச் சுவடுகள். கனவில் பார்த்த கடைசி காட்சியின் சில நிமிடங்கள் அவர் கண் முன் தோன்றியபோது, மணலில் இருந்த காலடிச் சுவடுகளைத் திரும்பி பார்த்தார்.

பல சமயங்களில், அவரது வாழ்க்கையின் பாதையில் ஒரே ஒரு ஜோடி காலடிச் சுவடுகள் மட்டுமே இருந்தன. வாழ்க்கையில் மிகுந்த சவால்களும் மன வேதனைகளும் ஏற்பட்ட சமயங்களில் எல்லாம் அவர் ஒரே ஒரு ஜோடி காலடிச் சுவடுகள் மட்டுமே இருந்ததைக் கவனித்தார். அவருக்கு அது வருத்தமாக இருந்தது.

அதைப் பற்றி கடவுளிடம் கேட்டார். "நான் உங்களைப் பக்தியுடன் பின்பற்ற தீர்மானித்தபோது நீங்கள் என் வாழ்க்கையில் எல்லா நேரங்களிலும் என்னைக் கைவிடாமல் வழிநடத்திச் செல்வதாகக் கூறினீர்கள்; ஆனால், என் வாழ்க்கையில் அதிகமான பிரச்சினைகள் ஏற்பட்ட நேரங்களில் ஒரே ஒரு ஜோடி காலடிச் சுவடுகளை மட்டுமே நான் பார்த்தேன்.

எனக்கு உங்களின் ஆதரவு மிகவும் தேவைப்பட்ட நேரங்களில் ஏன் என்னை விட்டு விலகி இருந்தீர்கள் என்பது எனக்கு புரியவில்லை" என்று கவலையுடன் கேட்டார்.

அதற்கு கடவுள், "என் அன்பு மகனே! நான் உன்னை அதிகம் அன்பு செய்கிறேன். சோதனைகளும் துன்பங்களும் உன்னைச் சூழ்ந்த காலங்களில் உன்னை நான் கைவிட்டதில்லை. நீ பார்த்த ஒரே ஒரு ஜோடி காலடிச் சுவடுகள் உன்னுடையது அல்ல. அவைகள் என்னுடயவை. அந்நேரங்களில் நான் உன்னை என் தோளில் சுமந்து கொண்டு நடந்து சென்றிருக்கிறேன்" என்று விளக்கினார்.

நாம் பொதுக்காலத்தின் 27ஆம் ஞாயிறைச் சந்தித்தோம். அன்றைய வாசகங்கள் கடவுளின் நற்செயல்களுக்காக நம்பிக்கையுடன் காத்திருக்க நம்மை அழைக்கின்றன.

இவ்வுலகில் நிகழும் போர்,



வன்முறை, தீவிரவாதம், பயங்கரவாதம், படுகொலைகள், ஏற்றத்தாழ்வுகள், அதிகாரவெறி, ஆணவச்செயல்கள், அடக்குமுறைகள், மனிதக் கடத்தல்கள், பெண்ணடிமைத்தனம் ஆகியவை பல நேரங்களில் கடவுள் மீதான நமது நம்பிக்கையை இழக்கச் செய்கின்றன.

ஏன் இப்படியெல்லாம் நடக்கின்றன? இதற்கொரு முடிவே இல்லையா? இவற்றையெல்லாம் கடவுள் கைகட்டி வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருக்கின்றாரே? என்றெல்லாம் அங்கலாய்த்துப் புலம்பித் தவிக்கின்றோம். ஆனால், இவற்றையெல்லாம் கடவுள் வெறுமனே வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கவில்லை.

மாறாக, நேரம் வரும்போது, அவற்றிற்கு இறைவன் முடிவு கட்டுகின்றார். ஆனால், அதற்காக நாம் பொறுமை காக்கவேண்டும் என்றும், முக்கியமாக, மிகுந்த நம்பிக்கையுடன் காத்திருக்கவேண்டும் என்றும் கடவுள் விரும்புகின்றார்.

கடந்த ஞாயிறு முதல் வாசகத்தில் சிறிய இறைவாக்கினரான அபகூக்கு இத்தகையதொரு மனநிலையில் கடவுளிடம் புலம்பித் தீர்ப்பதை நம்மால் காண முடிகிறது.

"ஆண்டவரே, எத்துணைக் காலத்திற்கு நான் துணை வேண்டிக் கூக்குரலிடுவேன்; நீரும் செவிசாய்க்காதிருப்பீர்? இன்னும் எத்துணைக் காலத்திற்கு வன்முறையை முன்னிட்டு உம்மிடம் அழுது புலம்புவேன்; நீரும் எம்மை மீட்காமல் இருப்பீர்? நீர் என்னை ஏன் கொடுமையைப் பார்க்கச் செய்கின்றீர், கேட்டினைக் காணச் செய்கின்றீர்? கொள்ளையும் வன்முறையும் என் கண்முன் நிற்கின்றன; வழக்கும் வாதும் எழும்புகின்றன.

ஆண்டவர் எனக்கு அளித்த மறுமொழி இதுவே: "காட்சியை எழுதிவை; விரைவாய் ஓடுகிறவனும் படிக்கும் வண்ணம் பலகைகளில் தெளிவாய் எழுது. குறித்த காலத்தில் நிறைவேறுவதற்காகக் காட்சி இன்னும் காத்திருக்கின்றது; முடிவை நோக்கி விரைந்து செல்கின்றது. ஒருக்காலும் பொய்க்காது. அது காலந்தாழ்த்தி வருவதாகத் தோன்றினால், எதிர்பார்த்துக் காத்திரு; அது நிறைவேறியே தீரும்; காலம் தாழ்த்தாது. இதை நம்பாதவரோ உள்ளத்திலே நேர்மையற்றவராய் இருப்பர்; நேர்மையுடையவரோ தம் நம்பிக்கையினால் வாழ்வடைவர்."

இறைநம்பிக்கையே மனித வாழ்வின் மையமாக அமைகிறது. இதுவே மனிதர் உயிர் வாழ்வதற்கும் அடிப்படையாக இருக்கின்றது. துன்பம், நோய், பிரிவு, வறுமை, புலம்பெயர்ந்து செல்லல், அனைவராலும் கைவிடப்பட்ட நிலை போன்ற கடினமான காலங்களில் ஒரு மனிதரை இறைவன்மீதும் தன்மீதும் ஆழமான அன்புகொள்ள செய்து வழிநடத்துவதும் நம்பிக்கையே!

**அருட்பணி சூசை மாணிக்கம்...**

# குருத்துவ பொன்விழா ஆண்டில் அருட் தந்தை பயஸ் பத்மராஜா

அருட் தந்தை வு.பயஸ் பத்மராஜா கடந்த 21ஆம் திகதி தனது குருத்துவப் பொன்விழாவினை கொண்டாடினார்.

மட்டக்களப்பு இறைமக்கள் புனித மரியாள் இணைப் பேராலயத்திலும்,

கல்முனை இறைமக்கள் கல்முனை திரு இருதயநாதர் ஆலயத்திலும் திருகோணமலை இறைமக்கள் மூதூர், குவாட்டுலுப்பே மற்றும் திருகோணமலை புனித மரியாள் பேராலயத்திலும் திருப்பலி பூசைகளை நிறைவேற்றி அவருக்காக இறை அருள் வேண்டினர்.

இவர் 1946.11.03 அன்று கல்முனை பாண்டிருப்பு கிராமத்தில் செபஸ்ரியான் தங்கராஜா தங்கராஜா தங்கரெட்ணம் ஆகிய ஆசிரிய தம்பதிகளுக்கு மகனாக பிறந்தார்.

கல்முனையிலிருந்து உருவான முதலாவது கத்தோலிக்க குரு இவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அருட்தந்தை பயஸ் பத்மராஜா அடிகளார் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இறையியல் பயின்று 1972.09.21ஆம் திகதியன்று குருவாக திருநிலைப்படுத் தப்பட்டார்.

அதனையடுத்து திருகோணமலை மட்டக்களப்பு திருகோணமலை மறை மாவட்டத்தில் பல பங்குகளில் குருவாக பணி புரிந்துள்ளது





டன் குரு முதல்வராகவும் நிதிப் பொறுப்பாளராகவும் அருங்கொடை இயக்கத்தின் இயக்குனராகவும் பணி புரிந்துள்ளார்.

1998ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அமெரிக்காவில் தனது இறைதூதுப் பணியை மேற்கொண்டு வரும் அவர்

அமெரிக்காவில் இருந்து கொண்டும் எமது நாட்டில் வறுமை நிலை மக்களுக்காக மனிதநேயப் பணிகளை ஆற்றி வருகிறார். அருட்தந்தை பயஸ் பத்மராஜாவுடன் அதே நாளில் குருவான மறைந்த அருட் தந்தை சந்திரா பெர்னாண்டோ,அருட் தந்தை சொய்சா, அருட்தந்தை யேசுதாசன் ஆகியோரும் குருத்துவப் பொன்விழாவில் நினைவுகூரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 17ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 07

### குறள் தரும் சிந்தனை



சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்ப தரண்

காவல் செய்யவேண்டிய இடம் சிறியதாயும், கோட்டையின் சுற்றுப் பெரியதாயும், சண்டையிட வரும் பகைவர்க்குமலைப்டைத்தருவதாயும்அமைவதுஅரண்.

## அற்ப நலன்களை எதிர்பார்த்து உண்மைக்கு புறம்பான பிரசாரம்

தற்போது நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இது வெளிப்படையான உண்மையாகும். இந்நெருக்கடியின் விளைவாக நாடும் மக்களும் பலவிதமான அழுத்தங்களையும் தாக்கங்களையும் எதிர்கொள்ளும் நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது.

இந்நெருக்கடி மக்களுக்கு சுமையாகவும் அழுத்தமாகவும் அமைவதைக் குறைத்து தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அத்தோடு இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கான முயற்சிகளும் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. அதன் பிரதிபலன்களும் மக்களுக்கு கிடைக்கப்பெற ஆரம்பித்து விட்டன.

இந்த நிலையில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்படுவது ஒவ்வொருவரும் பொறுப்பாகும். இப்பொருளாதார நெருக்கடிச் சூழலைப் பயன்படுத்தி அரசாங்கத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையிலான முயற்சிகளும் முன்னெடுக்கப்படவே செய்கின்றன. அவற்றின் ஊடாக அற்ப இலாபங்களை அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இதன் நிமித்தம் உண்மைக்குப் புறம்பான விஷமப் பிரசாரங்களும் அவ்வப்போது முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வாறு முன்னெடுக்கப்படும் பிரசாரங்களில் ஒன்றாக, அரசாங்க ஊழியர்களின் அடுத்தமாத சம்பளத்தைக் குறைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்ற செய்தியும் அமைந்துள்ளது.

இவ்விடயம் அரசாங்க ஊழியர்கள் மத்தியில் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. ஆனாலும் நாடும் மக்களும் தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் பலவிதமான அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ள சூழலில், அவ்வாறானதொரு தீர்மானத்தை அரசாங்கம் எடுக்குமா என்பதே பெரும் கேள்விக்குரிய விடயம். அவ்வாறான ஒரு நடவடிக்கையை முன்னெடுக்கும் போது மக்கள் மேலும் அசௌகரியங்களுக்கு உள்ளாவர். இதனை அறியாததல்ல அரசாங்கம்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் விளைவாக அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களதும் விலைகள் பெரிதும் அதிகரித்துள்ளன. இதன் விளைவாகவே பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் மக்களுக்கு சுமையாக அமைவதைக் குறைத்து தவிர்ப்பதில் விஷேட கவனம் செலுத்தப்பட்டு இருக்கின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆகவே அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்பது தவறான செய்தி என்பதுதான் மக்களின் கருத்தாக உள்ளது. அச்செய்தியை நம்பவும் அவர்கள் தயாராக இல்லை.

இவ்வாறான சூழலில் நிதி இராஜாங்க அமைச்சர் ரன்ஜித் சியம்பலாப்பிட்டியவும் இதனை உறுதிப்படுத்தும் வகையில் பின்வருமாறு குறிப்பிட்டு இருக்கின்றார்,

'அரசாங்க ஊழியர்களின் அடுத்தமாத சம்பளம் குறைக்கப்பட உள்ளதாக மேற்கொள்ளப்படும் பிரசாரம் மற்றும் செய்திகளில் எவ்வித உண்மைகளும் இல்லை' என்று சுட்டிக்காட்டியுள்ள இராஜாங்க அமைச்சர், 'இது தொடர்பில் அரசாங்கம் எதுவிதத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை' என்றும் 'சில தரப்பினர் திட்டமிட்டு மேற்கொள்ளும் உண்மைக்குப் புறம்பான பிரசாரம் இது' என்றும் 'அரச ஊழியர்களின் தொழில் உரிமையைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


அரச ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை தம் பொறுப்பாகக் கருதி அரசாங்கம் செயற்படுவது வெளிப்படையான உண்மை. தற்போதைய பொருளாதார நெருக்கடிச் சூழலில் உண்மைக்கு புறம்பான பிரசாரங்களை முன்னெடுப்பதன் ஊடாக நாடும் மக்களும் தாக்கங்களுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாவர் என்பதும் மறைக்க உண்மையாகும். அதன் விளைவாக தற்போதைய நெருக்கடி மேலும் அதிகரிக்கவே செய்யும்.

அதேநேரம் இவ்விதமான பிரசாரங்களின் உண்மைத் தன்மையையும் பின்புலத்தையும் மக்கள் அறியாதவர்கள் அல்லர். அதன் விளைவாகவே இப்பிரசாரம் தொடர்பில் பெரும்பாலானவர்கள் பெரிதாக கண்டு கொள்ளாத நிலைமை காணப்படுகிறது.

ஒரு தேசியப் பிரச்சினையாக விளங்கும் இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் பொறுப்புணர்ந்து செயற்படுவது மிகவும் அவசியம். இதைவிடுத்து மக்களைத் தூண்டிவிடும் வகையில் செயற்படுவது நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மைகளைப் பெற்றுக் கொடுக்காது. உண்மைக்கு புறம்பான விஷமப் பிரசாரங்களை முன்னெடுப்பதற்கான களமாக சமூக ஊடகங்கள் விளங்குகின்ற இன்றைய சூழலில், அதனைப் பொறுப்புடன் பயன்படுத்திட வேண்டும். தவறும் பட்சத்தில் தவறானதும் பிழையானதுமான வழிகளில் மக்கள் இட்டுச் செல்லப்பட வழிவகுக்கப்படலாம். அவ்வாறான நிலைமை ஏற்பட எவரும் துணைபோகலாகாது.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதில் ஜனாதிபதியிடம் தெளிவான திட்டம்



ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் தனது முதலாவது வெளிநாட்டு விஜயமாக பிரித்தானியாவின் இரண்டாவது எலிசபெத் மகாராணியின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட ரணில் விக்கிரமசிங்க, தனது அடுத்த விஜயமாக ஜப்பான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டார்.

ஜனாதிபதியின் அவ்விஜயத்தை சிலர் விமர்சித்தார்கள். நாட்டில் மோசமான பொருளாதார பிரச்சினைகள் உள்ள பின்னணியில் மகாராணிக்கு இறுதியஞ்சலி செலுத்த அவர் சென்றார் என்று கேலியாக சிலர் கூறினார்கள். ஆனால் அந்தக் கூற்றுகள் தற்போது வெளிநாட்டு ஊடக அறிக்கைகள் மூலம் நகைப்புக்குக்குரிய முடிவுகளை பெற்று வருகின்றன.

இலங்கையின் கடன் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு ஜப்பான் தரப்பில் இருந்து ஆதரவு வழங்க தயாராக இருப்பதாக அந்நாட்டு நிதி அமைச்சர் சுனிச்சி சுசுக்கி விடுத்துள்ள அறிக்கையை மேற்கோள் காட்டி வெளிநாட்டு ஊடகங்கள் இதுபற்றி செய்தி வெளியிட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர்களின் வருடாந்த மாநாட்டில் பங்குபற்றிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே ஜப்பானிய நிதி அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

வெளிநாட்டு ஊடகங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலரை வழங்க சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல் அளித்துள்ளதாகவும், எது எவ்வாறாயினும் நட்பு நாடுகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பலனாகவே ஜப்பானின் ஆதரவைப் பெறுவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும் சீனா, இந்தியா உள்ளிட்ட ஏனைய கடன் வழங்கும் நாடுகளின் ஆதரவையும் பெற வேண்டுமென ஜப்பானிய நிதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது தோன்றியுள்ள பொருளாதார பிரச்சினையிலிருந்து இலங்கையை மீட்டெடுக்க ஜனாதிபதிக்கு தெளிவான திட்டம் ஒன்றுள்ளது. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை அவர் படிப்படியாக மேற்கொண்டு வருகின்றார். பிரச்சினை என்னவென்றால் இது பற்றி சிலர் அறியாதிருப்பதாகும். இல்லாவிட்டால் உண்மையை மறைக்க அவர்கள் எடுக்கும் முயற்சியாகும்.

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டு விஜயங்களால் உருவாகியுள்ள அனுகூலங்கள்



### உலகத் தலைவர்கள் பயணிக்கும் பாதை!

இந்தப் பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளிநாட்டு நட்பு நாடுகளின் ஒத்துழைப்பை பெற வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நம்பிக்கை என்பது தெளிவாகிறது. அந்த நோக்கத்திற்காக ஜனாதிபதி தற்போது வெளிநாட்டுத் தலைவர்கள் மற்றும் ஏனைய பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி வருகின்றார். மேலும் இன்று உலக வழமையாகக் காணப்படுவது ஒரு நாட்டிற்கான உத்தியோகபூர்வ விஜயங்கள் அல்ல, அதற்குப் பதிலாக அரச தலைவர்கள், உயர் மட்ட இராஜதந்திர நிகழ்வுகள் மற்றும் உச்சிமாநாடுகள் மூலம் இராஜதந்திர உறவுகளை பேணுவதாகும்.

இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதனையே பின்பற்றி வருகின்றார். அவநம்பிக்கைக்குப் பதிலாக நம்பிக்கையை ஏற்படுத்தி இலங்கையின் சம்பிரதாய இராஜதந்திர உறவுகளுக்கு அப்பால் நட்பினை உதவியாகக் கொண்டு அவர்கள் அனைவரினதும் சக்தி மற்றும் பங்களிப்பை இந்நாட்டுக்கு முதலீடாக்கியுள்ளது தற்போது உறுதியாகி உள்ளது.

அதன்படி ஜனாதிபதி உலக மரண வீடுகளுக்கு விஜயம் செய்கிறார் என்று யார் கூற முயற்சி செய்தாலும் ஜனாதிபதியின் நோக்கம் என்ன என்பதை சிந்திக்கும் அனைவருக்கும் அதனைப் புரிந்து கொள்ள முடியும்.

இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் நாட்டுக்காக பயன்படுத்தி வருகின்றார். நாட்டை துர்ப்பாக்கியமான நிலையில் இருந்து மீட்டு எதிர்கால பரம்பரைக்கு வளர்ச்சி அடைந்த நாடொன்றை உருவாக்கிக் கொடுப்பதே அவரது நோக்கமாகும்.

அண்மையில் அவர் மேற்கொண்ட ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸுக்கான விஜயங்களும் அவ்வாறான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

### கொழும்பிலிருந்து ஜப்பானுக்கு!

ஜனாதிபதி கடந்த 26 ஆம் திகதி அதிகாலை ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக மாத்திரமல்ல ஜப்பானிய பிரதமர், வெளிநாட்டு அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடி இலங்கைக்கான ஒத்துழைப்பை வழங்கும்படி அவர்களிடம் கோருவதற்காகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜப்பான் வெளிநாட்டமைச்சர் யோஷிமாஸா ஹயாஸிக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று 27ஆம் திகதி முற்பகல் டோக்கியோ நகரில் நடைபெற்றதோடு இலங்கைக்கான கடன் மறுசீரமைப்புக்காக கடன் உரிமையாளர்களுடனான கலந்துரையாடல்களில் தமது அரசாங்கம் முக்கிய பங்கு வகிக்க தயாராக இருப்பதாக ஜப்பானிய வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்து கவனம் செலுத்தும் வகையில் இலங்கையில் எதிர்கால முதலீட்டு வாய்ப்புகளை ஆராய ஜப்பான் தயாராக இருப்பதாகவும் ஜப்பானிய வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார்.





## நாட்டை மீட்டெடுப்பதில் நட்பு நாடுகளின் ஒத்துழைப்பை பெற வேண்டும் என்பதே ஜனாதிபதியின் குறிக்கோள்



(09ஆம் பக்கம் பார்க்க)

சுஷந்தி பிரதீபிகா
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# ஹெம்மாதகம பிரதேச சிங்கள, தமிழ்மொழிமூல பாடசாலை ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு

சர்வதேச ஆசிரியர்கள் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 6 ஆம் திகதி மாவனல்லை கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஹெம்மாதகம பிரதேச சிங்கள, தமிழ் மொழிமூல பாடசாலை ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வொன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் உள்ள ஆறு சிங்களப் பாடசாலைகள் மற்றும் ஏழு முஸ்லிம் பாடசாலைகளையும் சேர்ந்த ஆசிரியர்களை ஒரே இடத்தில் ஒன்று கூட்டி அவர்களை கௌரவித்து நினைவுச்சின்னங்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

PMV அதிபர் NAGARAGIRI, N S அதிபர், மடுள்போவ மு. ம. வி அதிபர் ஆகியோரின் சிந்தனையில் உருவான இத்திட்டத்தை செயற்படுத்த ஹெம்மாதகம பிரதேசத்திலுள்ள சகல பாடசாலைகளினதும் அபிவிருத்திச் சங்கங்கள் முன்வந்துள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 30.09.2022 அன்று பள்ளிபோருவ முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதிபரும் SDEC இன் தலைவருமான அஷ்ஷெய்க் நிஸாம் தலைமையில் ஏனைய சிங்கள, முஸ்லிம் பாடசாலை அதிபர்கள், SDEC உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.

உரையாடலை PMV உபஅதிபர் அஷ்ஷெய்க் பாரிஸ் ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து அதிபர்கள், SDEC உறுப்பினர்கள் தமது ஆலோசனைகளை முனவைத்ததோடு இந்நிகழ்வை பூரணமாக நடத்தி முடிக்க ஒத்துழைப்பை நல்குவதாக உறுதியளித்தனர்.

இக்கலந்துரையாடல் மற்றும் பாராட்டு விழாவின் இலக்குகளாக கலாசார புரிந்துணர்வு, யதார்த்தபூர்வ நல்லிணக்கத்திற்கு வழிகோலல் போன்றன விளங்குகின்றன. சகல பாடசலைகளினதும் SDEC ஒன்றியம் ஒன்றை உருவாக்குதல், சிங்கள, முஸ்லிம் உறவில் புதிய திருப்பத்தை உருவாக்க பாடசாலையூடாக செயல்திட்டங்கள் உருவாக்கல், மாணவர்கள் மத்தியில் நல்லிணக்கத்தை தொடர்ச்சியாக எடுத்துச் செல்லல், ஆசிரியர்களிடையே நட்புணர்வை வளர்த்து கல்வி மற்றும் அது சார்ந்த செயல்பாட்டு திட்டங்களை பகிர்ந்து கொள்ளல் என பல செயல் திட்டங்களை அதிபர்களும் SDEC இனரும் முன்வைத்தனர்.

இக்கலந்துரையாடலை எதிர்வரும் திங்கள் மாலை 6 மணிக்கு தொடர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு வேலைப்பளு மற்றும் திடீர் ஏற்பாடு போன்ற காரணங்களால் கலந்து கொள்ள தவறிய சில அதிபர்கள் மற்றும் SDEC உறுப்பினர்கள் கலந்துரையாடவே இச்சந்திப்பு ஏற்பாடாகியுள்ளது.

## பள்ளிபோருவ மு.வியில் கலந்துரையாடல்





நியாஸ் ஸாலி
இணைச் செயலாளர்,
SDEC, PMV

# கிழக்கின் குரல்

# இலங்கையை பசுமையாக்குவோம்" கருப்பொருளுடன் அஞ்சலோட்டம்

## பதுளையிலிருந்து கல்முனைக்கு சைக்கிளில் சவாரி

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

இலங்கையை பசுமையாக்குவோம் கருப்பொருளில்,பதுளையிலிருந்து கல்முனை நோக்கி சைக்கிள் அஞ்சலோட்டம் ஆரம்பமாக உள்ளது.

மருதமுனை சைக்கிளிங் கிறீன் அமைப்பு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துடன் இணைந்து, இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளன.

நாட்டின் மகத்துவத்தை பேணுதல், சுற்றுலாத்துறையை ஊக்கப்படுத்துதல், சைக்கிளோட்டத்தின் பயன்களை வெளிகொண்டுவருதல் உள்ளிட்ட நோக்குகளுடன், இந்த சைக்கிள் அஞ்சல் ஓட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை பதுளையில் இது தொடர்பிலான விளக்க நிகழ்வுடன் இந்த அஞ்சலோட்டம் ஆரம்பமாகும்.சனிக்கிழமை காலை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பித்து, பதுளை , மகியங்கனை, பதியதலாவ, மகாஓயா, செங்கலடி, மட்டக்களப்பு ஊடாக கல்முனையை வந்தடையவுள்ளது



இந்நிகழ்வில் மருதமுனை சைக்கிளிங் கிறீன் கழகத்தைச் சேர்ந்த சுமார் 12 வீரர்கள் பங்குபற்றுகின்றனர்.



உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் பாடசாலை அதிபர் யு.கே. அப்துர் ரஹீம் தலைமையில் நேற்று (03) இடம்பெற்றது. இதன் போது அதிதியாக கலந்து கொண்ட அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் முஹம்மட் பஸ்மில் உட்பட பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் மாணவர்களுக்கு இனிப்புக்கள், பரிசில்கள் வழங்குவதை காணலாம். (படம் : கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

## சம்மேளனத் தலைவராக ரஊப் ஏ மஜீத் தெரிவு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் புதிய தலைவராக ரஊப் ஏ மஜீத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் பொதுச்சபைக் கூட்டம் நேற்று (02) ஞாயிற்றுக்கிழமை காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும் ஆப் பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது காத்தான்குடி ஜம்இய்யத்துல் உலமா சபை பிரதி நிதிகள் சம்மேளனத்தின் நிருவாக உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், உலமாக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இதன்போது,சம்மேளனத்தின் செயற்பாட்டறிக்கை, கணக்கறிக்கைகள் வாசிக்கப்படதுடன், 2022 மற்றும் 2023ம் ஆண்டுக்கான சம்மேளனத்தின் புதிய நிருவாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர். இதனடிப்படையில் சம்மேளனத்தின் புதிய தலைவராக காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும் ஆப்பள்ளிவாசலின் சார்பில் அதன் தலைவர்; ரஊப் ஏ மஜீத் தெரிவு செய்யப்பட்டார். பொதுச் செயலாளராக காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சார்பில் அஷ்ஷெய்ஹ் ஏ.எல்;.எம். சபீல் நழீமி மற்றும் பொருளாளராக புதிய காத்தான்குடி நூறானிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல் சார்பில் எஸ். எச்..அன்சார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். உப தலைவர்கள், பிரதி செயலாளர் உட்பட நிருவாகிகளும் இதில்,தெரிவு செய்யப்பட்டனர்.

இப்பொதுச் சபைக்கூட்டத்தில் பல் வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

## பட்டா ரக வாகனம் வீதியை விட்டு விலகி விபத்து

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை ஹொரவப் பொத்தானை பிரதான வீதி நொச்சிக்குளம் பகுதியில் டிமோ பட்டா வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 15 பேர் காயமடைந்தனர்.

இவ்விபத்து நேற்றுமுன்னிரவு (02) 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த பலர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள், மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவர்களில் எட்டுப்பேர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பகுதியில், நிகழ்வொன்றில்கலந்துவிட்டு வீடுதிரும்பும் வழியிலே இவ்விபத்து இடம்பெற்றது. விபத்துக்கான காரணம் இதுவரைத் தெரியவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கடற்கரை பிரதேசங்களை சுத்தப்படுத்தும் வேலைகள் அக்கரைப்பற்றில் ஆரம்பம்

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று கிங்ஸ் உணவக ஏசியன் சிப் நிறுவனத்தின் அனுசரணையில்,அக்கரைப்பற் று கடற்கரை பிரதேசத்தின் இரண்டு கிலோ மீற்றர் தூரப்பகுதி சுத்தம் செய்யப்பட்டது.

சர்வதேச கரையோர சுத்தப்படுத்தல் தினத்யொட்டி,அம்பாறை மாவட்ட கரையோர கடற்கரை பிரதேசத்தை சுத்தப்படுத்தும் வேலைத் திட்த்துக்கிணங்க இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.



கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தர் திரு கே.சிவகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஏசியன் சிப் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எல்.அனஸ்தீன்,உட்பட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, அக்கரைப்பற்று கடற்கரை பிரதேசங்களில் காணப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுப்பொருட்கள், உட்பட கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டன.

## இளைஞர்களுக்கு நீச்சல் பயிற்சி

(கல்குடா தினகரன் நிருபர்)

இளைஞர்களுக்கான இலவச நீச்சல் பயிற்சி முகாம் வாகரை காயாங்கேணி கடற்கரையில், கல்குடா டைவர்ஸ் அணியின் ஏற்பாட்டில் 'ஸ்ரீலங்கா' லைப் சேவிங் லைப் காட்' அமைப்பின் வழிகாட்டலுடன் கடந்த (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

'ஸ்ரீலங்கா லைப் சேவிங் லைப் காட்' அமைப்பின் அங்கத்தவர்களான கல்குடா டைவர்ஸ் அணியின் விஷேட சுழியோடிகளான அப்துல் மஜீத் ஹலீம்,ஹபீப் முஹம்மட் இப்றாஹீம், நாஸர் முஹம்மட் றினாஸ், அப்துல் மஜீட் மபாஸ் ஆகியோர் கலந்து கொண்டு இளைஞர்களுக்கு நீச்சல் பயிற்சியின் முக்கியத்துவம், அதனால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக அறிவுறுத்தியதுடன், கடலில் நீச்சல் பயிற்சியையும் வழங்கினர்.

கல்குடா டைவர்ஸ் அணியின ஏற்பாட்டாளரும், சமூக சேவையாளருமான ஏ.சீ.எம்.நியாஸ்தீனின் அனுசரணையில் நடைபெற்ற இந்த நீச்சல் பயிற்சியில், மட்டக்களப்பு மாவட்டத்தைச்சேர்ந்த தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

இப்பிரதேசத்தில் இடம்பெறும் நீர் அனர்த்தங்களில் நீரில் மூழ்குபவர்களை மீட்கும் பணிகளையும் அண்மைக்காலமாக கல்குடா டைவர்ஸ் அணியினர் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் காலங்களில் இன்னும் சிறப்பான முறையில் அதிகமான இளைஞர்களுக்கு நீச்சல் மற்றும் உயிர்காக்கும் பயிற்சி நெறிகளை வழங்கவுள்ளதாகவும், இதில் நீச்சல் பழகுவதற்கு ஆர்வமுள்ளவர்கள் பயிற்றுவிப்பாளரான அப்துல் மஜீத் ஹலீமை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பேத்தாழை கிராமத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பம்

(பாசிக்குடா நிருபர்)

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு பேத்தாழை கிராமத்தில்,டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகின. வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்,மட்டக்களப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ஜி.சுகுணனின் ஆலோசனையில், இந்நடவடிக்கையை ஆரம்பித்தது. வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சிவப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எதிர்வரும் ஐந்தாம் திகதி வரை, இந்த டெங்கு ஒழிப்பு வேலைகள் இடம்பெறவுள்ளதாக வவாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி ஸ்ரீவ் சஞ்ஜீவ் தெரிவித்தார். பொதுச்சுகாதார பரிசோதகர்கள், கடற்படையினர், பிரதேசசபை ஊழியர்கள், மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பத்துக் குழுக்களாக இணைந்து இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

வீடு, வீடாகச்சென்று டெங்கு நுளம்பின் தாக்கமுள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றை அழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன் தேவையான ஆலோசனைகளும் அதிகாரிகளால் வழங்கப்படுகிறது.

இதன் ஆரம்ப நிகழ்வில், பிராந்திய தொற்று நோயியல் வைத்தியர் வே.குணராஜசேகரம், மாவட்ட பூச்சியியலாளர் திருமதி தர்சினி குணசீலன் ஆகியோர் பங்கு பற்றினர்.

## "சிறகு முளைத்த மீன்;" கவிதை நூல் வெளியீட்டு விழா

(மட்டக்களப்பு விஷேட நிருபர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாகப் பணியாற்றும் ஹயாத்து முஹம்மது ஜலீலா முஸம்மில் எழுதிய “சிறகு முளைத்த மீன்;” கவிதை நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை (01) இரவு ஏறாவூர் வாவிக்கரை கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.



ஏற்பாட்டுக் குழுத் தலைவி ஆசிரியை என்.எம். ஆரிபா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில்,

ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் வி. நிஹாறா, கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மில், கிளிநொச்சி மாவட்ட வன இலாகா அதிகாரி எம்.ஏ. லியாவுல் ஹக்கீம், ஏறாவூர் நகர முதல்வர் எம். எஸ். நழிம் உட்பட இலக்கியவாதிகள்,எழுத்தாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கவிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வைத்தியதுறைக்கு மேலதிகமாக இலக்கியத்துறைக்கு வைத்தியர் ஜலீலா ஆற்றிவரும் பங்களிப்புக்காக தமிழ்ச்சாரல் கலை இலக்கிய வட்டத்தினால் “கவிமுகி” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



குறிஞ்சாக்கேணிப் பாலத்தின் பழுதடைந்த பகுதியில் உருக்குப்பாலம் அமைப்பதற்கு தேவைப்படும் நிதியை வழங்குமாறு,கிழக்கு மாகாண ஆளுநரிடம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், கோரிக்கை விடுத்துள்ளார். இக்கடிதத்தை ஆளுநரிடம் அவர் கையளிப்பதை காணலாம்.சுமார் இருபது இலட்சம் ரூபா இதற்கு தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. (படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

## அக்கரைப்பற்று காதிரிய்யா ஆங்கில முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு, அக்கரைப்பற்று காதிரிய்யா மக்கள்சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் காதிரிய்யா ஆங்கில முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வு சனிக்கிழமை (01) காலை மன்றத்தின் தலைவர் யூ.எல்.அப்துர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று காதிரிய்யா வித்தியாலய அதிபர் ஏ.எம்.ஜெசீம் கலந்து சிறப்பித்தார்.

முன்பள்ளி நிலைய ஆசிரியைகளின் நெறிப்படுத்தலில் ஒழுங்கு செய்யப்பட்ட சங்கீத கதிரை, பலூன் உடைத்தல், கயிறு இழுத்தல், ஓட்டப்போட்டி, போத்தலில் நீர் நிரப்புதல் , சாக்கு ஓட்டம், எலுமிச்சை ஸ்பூன் ஓட்டம் ஆகிய நிகழ்வுகள் மிகவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

நிகழ்வின்போது, சிறுவர் தின போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பிரதம அதிதி மற்றும் விஷேட அதிதிகளால் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.



தம்பிலுவில் தேசிய கல்லூரியில் அதிபர் பா.சந்திரேஸ்வரன் தலைமையில் நேற்று (03) வாணி விழா இடம்பெற்றது. கலை நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமான இவ்விழாவில் பங்கேற்றுள்ள ஒரு பகுதியினரைக் காணலாம். (படம்: காரைதீவு குறூப் நிருபர்)

## சாதனை மாணவர்களுக்கு கௌரவம்

(கல்குடா தினகரன் நிருபர்)

ஓட்டமாவடி சிராஜ் எக்ஸலன் கல்லூரியினால் நடாத்தப்படும் பகுதிநேர வகுப்பு பாடங்களில் திறமை காட்டிய சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

ஓட்டமாவடி சிராஜ் எக்ஸலன் கல்லூரியின் அதிபர் ஏ.எல்.ரஹீஸ் (நளிமி) தலைமையில் நடந்த இந்நிகழ்வில், கல்லூரியின் பணிப்பாளர் எம்.எம்.எம்.நவாஸ் ஆசிரியர், கல்லூரியின் நிருவாக உறுப்பினர்களான அஷ்ஷெய்க் ஏ.நஜீம் (சிறாஜி), அஷ்ஷெய்க் எம்.கபீர் (இஸ்லாஹி), கல்லூரியின் விரிவுரையாளர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்;

## சிறுவர்கள் வாழும் உகந்த சூழலை உருவாக்க ஒன்றுபட்டு உழைப்போம்

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு அம்பாறை,மல்வத்தை புது நகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் எஸ். சிவயோகராஜா மற்றும் பிரதி அதிபர் ஏ.எல்.சர்ஜீன் ஆகியோரின் தலைமையில் கடந்த சனிக்கிழமை இந்நிகழ்வு நடைபெற்றது.

ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்குபற்றுதலுடன் நடந்த இந்நிகழ்வில், புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் சமூக சேவையாளரும் வர்த்தகருமான மார்டின் ஜெயராஜ் பிரதம அதிதியாகவும், கல்விக்கான கண்கள் அமைப்பின் ஸ்தாபகரும் சமூக சேவையாளருமான கனகலிங்கம் மகாலிங்கம், கமலேஸ்வரன், இளம் விஞ்ஞானி சோமசுந்தரம் வினோஜ்குமார் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.







இவ்வைபவத்தில் சமூக சேவையாளர் மார்டின் ஜெயராஜ் உரையாற்றுகையில், 'சிறுவர்களே எமது எதிர்கால தலைவர்கள். அவர்களைக் கல்வியில் முன்னிலைக்கு கொண்டு வர வேண்டும். இதன் நிமித்தம் அவர்கள் வாழ்வதற்குரிய சூழலை உருவாக்கி கொடுப்பதற்கான வளங்களையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதே எங்களுடைய பிரதான நோக்கமாகும். இதற்காக புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்'.

தற்போது நாங்கள் இலங்கையில் உள்ள பல மாவட்டங்களில் முதலீடுகளைச் செய்துள்ளோம். அதன் உற்பத்திகளை ஐரோப்பிய சந்தைக்கு அனுப்பி வைப்பதை பிரதான இலக்காகக் கொண்டுள்ளோம்' என்றார். இவ்வைபவத்தில் சுவிட்சர்லாந்து நாட்டை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பைனஸ் தனியார் நிறுவனத்தின் ஸ்தாபகர் விக்னேஸ்வரன் சிவபாதத்தின் அனுசரணையில், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.




# தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய வழக்கு 08 வருடங்களின் பின் தீர்ப்பு;

## கேட்போர் கூடத்தை நிர்மாணித்து கொடுக்க உத்தரவு

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய கட்டட நிர்மாணிப்பு தொடர்பில், இலங்கை மின்சார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எட்டு வருடங்களாக விசாரிக்கப்பட்டு, வழக்கின் தீர்ப்பு செப்டெம்பர் 30ஆம் திகதி மூவர் அடங்கிய மேல்முறையீட்டு நீதி மன்ற நீதியரசர்களால் தீர்ப்பளிக்கப்பட்டது.

அதற்கமைய, செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய, தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு சகல வசதிகளுடன் கூடிய கேட்போர் கூடத்தை நிர்மாணித்து கொடுக்க வேண்டிய பொறுப்பு இலங்கை மின்சார சபைக்கு உரியது என்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேல் கொத்மலை நீர் மின் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம் முழுமையாக பாதிக்கப்பட்டு அதற்கு பதிலாக 7 கட்டட தொகுதிகளை நிர்மாணித்து கொடுப்பதாக இலங்கை மின்சார சபை மத்திய மாகாண கல்வி அமைச்சினூடாக ஒப்பந்தம் செய்திருந்தது.

அதற்கு அமைய 4 வகுப்பறை கட்டடத் தொகுதிகளை நிர்மாணித்து எஞ்சிய கட்டடங்கள் மாத்திரம் இழுபறிக்கு மத்தியில் நிர்மாணித்து பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

எனினும், பாடசாலைக்கு நிர்மாணித்து வழங்க வேண்டிய சகல வசதிகளுடன் கூடிய கேட்போர் கூட கட்டடத்தை நிர்மாணித்து கொடுப்பதில் இலங்கை மின்சார சபையின் மேல் கொத்மலை நீர்மின் திட்டத்திற்கு பொறுப்பான பணிப்பாளர் உட்பட அதிகாரிகள் மறுப்பு தெரிவித்திருந்தனர்.

இலங்கை மின்சார சபை, கல்வி அமைச்சுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்திற்கமையவே குறித்த கட்டடங்களை நிர்மாணித்துக் கொடுக்க வேண்டும் என ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்த போதிலும் கேட்போர் கூடம் நிர்மாணிக்கப்படவில்லை.

இந்த விவகாரம் தொடர்பில், பாடசாலையின் அப்போதைய அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மூவர், கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் 2014 ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணவர்தனவினால் ஒதுக்கப்பட்ட நிதி உதவி மூலம் ஒரு கோடி 45 இலட்சம் ரூபா பெறுமதியான தண்ணீர் பவுசர் வண்டியை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரமித்த பண்டார தென்னகோன் பவுசர் வண்டியை அம்பன் கங்க கோரலை பிரதேச சபை தவிசாளர் என். யோகராஜாவிடம் கையளிப்பதைக் காணலாம்.

(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# நன்னம்பிக்கை கல்வி நிதியத்தால் பல்கலை மாணவருக்கு புலமைப் பரிசில்

**தலவாக்கலை குறூப் நிருபர்**



நன்னம்பிக்கை கல்வி நிதியத்தால் மலையக பல்கலைக்கழக 67 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நன்னம்பிக்கை கல்வி நிதியம் வருடந்தோறும் இலங்கையில் அரச பல்கலைக்கழகங்களில் பயிலும் மலையக மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றது. அதற்கிணங்க 67 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் (2) ஹற்றன் வெப்ஸ்டர் சர்வதேச பாடசாலையில் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் நன்னம்பிக்கை கல்வி நிதியத்தின் தலைவர் எஸ்.சுப்பையா, செயலாளர் பேராசிரியர் தை.தனராஜ், பொருளாளர் சட்டத்தரணி எஸ்.தாயுமானவன், உபதலைவர் முன்னாள் அமைச்சின் செயலாளர் எம்.வாமதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர். நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்கள் 30 பேருக்கும் இரத்தினபுரி மாவட்டத்தை சேர்ந்த 16 மாணவர்களுக்கும் கண்டி மாவட்டத்தை சேர்ந்த நான்கு மாணவர்களுக்கும் பதுளை மாவட்டத்தை சேர்ந்த 5 மாணவர்களுக்கும் கேகாலை மாவட்டத்தை சேர்ந்த ஒரு மாணவரும் இந்நிதி உதவியினை பெற்றுக் கொண்டனர்.

### போகாவத்த அதிபர் இடமாற்றம்

# பொய் குற்றச்சாட்டென மாணவர், பெற்றோர் ஆர்ப்பாட்டம்





**ஹற்றன் சுழற்சி நிருபர்**

போலிக் குற்றச்சாட்டுகளின் பிரகாரம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள அதிபரை, மீண்டும் தமது பாடசாலைக்கு நியமிக்குமாறு வலியுறுத்தி கொட்டகலை, பத்தனை போகாவத்த சிங்கள வித்தியாலய மாணவர்களும்,பெற்றோரும் நேற்று (03) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு பாடசாலையில் பணம் வசூலிக்கப்பட்டதாகவும், அதனை வழங்க மறுத்த மாணவியொருவரை தாக்கினார் எனவும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு போலியானது என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, இது தொடர்பில் விரைவில் விசாரணைகளை முன்னெடுத்து, தமது பாடசாலை முன்னேற்றத்துக்காக பாடுபட்ட அதிபரை மீண்டும் தமது பாடசாலைக்கு அனுப்புமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கையும் விடுத்தனர். பாடசாலைக்கு முன்பாக தலவாக்கலை நாவலப்பிட்டிய பிரதான வீதியில் போகாவத்தை நகரத்தில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்ப்பு பதாதைகளை ஏந்திய வண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு போராட்டகாரர்கள் போராட்டத்தினை சுமார் இரண்டு மணித்தியாலங்கள் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடதக்கது.

### கண்டி மடவளை பஸார்

# வை.எம்.எம்.ஏயின் இரத்ததான முகாம்

**பூஜாபிட்டிய தினகரன் நிருபர்**

கண்டி மடவளை பஸார் வை.எம்.எம்.ஏ. அமைப்பினால் 16 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததான முகாம் 09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 தொடக்கம் மாலை 3.00 மணி வரை மடவளையில் அமைந்திருக்கும் சன்ஷைன் திருமண மண்டபத்தில் அமைப்பின் தலைவர் ஏ.எல்.எம் ரிஷாட் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் இஹ்ஸான் ஹமீத் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். அன்றைய தினம் இரத்ததானம் வழங்குபவர்களுக்கு சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரத்ததான முகாமில் பிரதேச மக்கள் அனைவரும் கலந்து கொண்டு இரத்ததானம் செய்ய முன்வருமாறு மடவளை பஸார் வை.எம்.எம்.ஏ. அமைப்பின் பொதுச் செயலாளர் ஏ.எம். ஹசன் பிராஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கித்துல்கல, இனோயா தோட்டத்தில் தொழிலாளர்கள் கவனஈர்ப்பு போராட்டம்



**புலத்கொஹுபிட்டிய குறூப்**

கித்துல்கல, இனோயா தோட்ட தொழிலாளர்கள் மற்றும் அதிகாரிகள் ஒன்றிணைந்து தமது உரிமைகளை பெற்று தருமாறு கோரி நேற்று (3) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போது தோட்ட முகாமைத்துவ அதிகாரசபையானது தொழிலாளர்களின் உரிமைகளை வழங்காது அவர்களை ஒடுக்குவதாகவும் தெரிவிக்கின்றனர். அத்தோடு தொழிலாளர்களின் உரிமைகளை வழங்க வேண்டுவதோடு, தொழில் திணைக்களம் மற்றும் அரசு இதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

# அதி உயர் வலய வர்த்தமானியை மீள பெற்றமை வரவேற்கத்தக்கது

## இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்



கொழும்பின் சில முக்கிய பிரதேசங்களை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவித்து செப்டெம்பர் 23 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சினால் வர்த்தமானி வெளியிடப்பட்டது. வெளியிட்ட வர்த்தமானியை ஜனாதிபதி மீளப்பெற்றமை வரவேற்கத்தக்கது என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

பாராளுமன்ற கட்டடத் தொகுதி மற்றும் அதனை அண்மித்த பகுதிகள் உயர்நீதிமன்றம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகள், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, கடற்படை தலைமையகம், பொலிஸ் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவ தலைமையகம் பிரதமர் அலுவலகம் அலரிமாளிகை மற்றும் அதனை அண்மித்த பகுதிகள் பாதுகாப்பு செயலாளர் மற்றும் முப்படை தளபதிகளின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் ஆகிய பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தமையால் இலங்கையில் அசாதாரண நிலை இன்னும் காணப்படுவதாக சர்வதேச சமூகம் கருதுகின்றது. எனவே இவ்வர்த்தமானி பிரகடனத்தால் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதர நெருக்கடிக்கு மத்தியில் சர்வதேச உதவிகள் கிடைப்பது தாமதமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

# உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறும்

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வேகமாக முன்னேற்றம் கண்டு வருவதாகவும் சமீபத்தில் இங்கிலாந்தைப் பின்னுக்குத்தள்ளி உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக வளர்ச்சி கண்டிருப்பதாகவும் இந்திய பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். 2030 ஆகும் போது அதன் உள்ளூர் பொருளாதாரம் மென்மேலும் வலுவடைந்து உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக விளங்கும் என இவர்கள் ஆரூடம் கூறியுள்ளனர்.

சமீபத்தில் இந்தியாவின் வேதாந்தா நிறுவனமும் தாய்வான் நிறுவனமும் இணைந்து 19 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் குஜாரத்தில் செமிகண்டக்டர் உற்பத்தி நிறுவனத்தை ஆரம்பிக்கும் திட்டத்தை இறுதி செய்தன.

இந்தியாவின் வர்த்தக மற்றும் தொழில்துறை மத்திய அமைச்சரான பியுஷ் கோயல் அமெரிக்காவுக்கு விஜயம் செய்து முக்கியமான வர்த்தக நிறுவனத் தலைவர்கள், அரசு அதிகாரிகள், கைத்தொழில் முக்கியஸ்தர்களை சந்தித்து இந்தியாவில் முதலீடு செய்யும் வாய்ப்புகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

# பதுளையில் நடைபெற்ற 'காந்தா சவிய' மகளிர் அமைப்பின் சர்வதேச சிறுவர் தினம்





**மாவத்தகம தினகரன் நிருபர்**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு 'காந்தா சவிய' மகளிர் அமைப்பினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் சிறுவர் தின நிகழ்வுகளின் பிரதான நிகழ்வு, இம்முறை பதுளை மாவட்டத்தில் நடைபெற்றது.

ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மிலின் அறக்கட்டளை நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் 'காந்தா சவிய' மகளிர் அமைப்பு, பல வருடங்களாக சிறுவர் தின நிகழ்வுகளை நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக ஏற்பாடு செய்து வருகிறது. கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட தொற்று நோய் பரவல் காரணமாக பிரதான நிகழ்வுகள் நடைபெறாத போதும், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு உதவித் திட்டங்கள் சிறுவர் தின நிகழ்வுகளை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய பண்டாரவளையில் அமைந்துள்ள சிறுவர் நன்னடத்தை நிலையத்திற்கு 'காந்தா சவிய' மகளிர் அமைப்பினால் சிறுவர் தொட்டில்கள், அதற்கான விரிப்புகள், தலையணைகள், குழந்தைகளுக்கான பால் மா, சிறுவர் ஆடைகள், பிஸ்கட் உட்பட பல அத்தியாவசிய பொருட்கள் மகளிர் அமைப்பின் தலைவி பெரோஸா முஸம்மிலினால் நன்னடத்தை நிலையத்தின் பொறுப்பதிகாரியிடம் வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் குழந்தைகள் கல்விகற்கும் பசறை மீதும்பிடிய இல. 01 தமிழ் வித்தியாலயத்தில் பயிலும் மாணவர்கள் மற்றும், அதே பிரதேசத்தை சேர்ந்த ஸ்ரீ கணேஷா வித்தியாலய மாணவர்கள், பதுளை வித்தியாதீப ஆரம்பப் பிரிவு பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் சீருடைகள், பேக், அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

### கர்ப்பிணித் தாய்மார்களுக்கு

# போசாக்கு விருத்திக்கான பண வவுச்சர்கள் வழங்கல்



ராகலை பிரதேசத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கினை விருத்திக்கும் வகையில் ஐயாயிரம் ரூபா பண வவுச்சர்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

இராகலை பொது சுகாதார பரிசோதகர் காரியாலயத்தில் (03) காலை இடம்பெற்ற இந் நிகழ்வு பொது சுகாதார பரிசோதகர் வைத்தியர் எ.கோபிராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இராகலை பொது சுகாதார பரிசோதகர் காரியாலயத்திற்குள் உள்வாங்கும் பிரதேசங்களில் இருந்து 410 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கட்டம் கட்டமாக இந்த உதவு தொகை வழங்கி வைக்கும் நிகழ்வில் முதற் கட்ட நிகழ்வில் நேற்று 40 கர்ப்பிணி தாய்மார்களுக்கு பண வவுச்சர்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த பண வவுச்சர்களை இராகலையில் கடந்த ஏழு வருடங்களாக இயங்கும் ஜப்பான் கோஜோ நிறுவனத்தின் கீழ் இயங்கும் செஜய நுண் நிதி நிறுவனம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

ஆ.ரமேஸ்

## இலங்கையை பொருளாதார... (06ஆம் பக்கத் தொடர்)

**சிங்கப்பூர் பிரதமருடனான சந்திப்பு!**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங்கிற்கும் இடையிலான சந்திப்பொன்று அன்றைய தினம் இடம்பெற்றது.

சிங்கப்பூருடன் ஏற்படுத்திக் கொண்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அத்துடன் ஜனாதிபதி அலுவலகத்தில் சர்வதேச வர்த்தக காரியாலயமொன்றும் அமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். சிங்கப்பூர் மீண்டும் இலங்கையுடன் முதலீட்டுக்கு தயாராகவுள்ளது என லீ சியோன் லூங் தெரிவித்தார்.

நண்பர் ஷிங்ஸோ அபேவுக்கு பிரியாவிடை!

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷிங்ஸோ அபேயின் பூதவுடலுக்கு இறுதி கிரியைகள் 27 ஆம் திகதி டோக்கியோ நகரில் நிப்போன் புடோகானில் பூரண அரச மரியாதையுடன் நடைபெற்றன. ஜப்பானின் பிரதமராக ஷிங்ஸோ அபே பிரதமராக இருந்த வேளையில் இலங்கையின் அபிவிருத்திக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜப்பானிய பிரதமர் புமியோ கிஸிடாவுக்குமிடையே 28 ஆம் திகதி இரு நாடுகளுக்குமிடையிலான உறவை வலுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அதேவேளை டோக்கியோ நகரின் இம்பீரியல் மாளிகைக்கு சென்ற ஜனாதிபதி, ஜப்பானிய பேரரசர் நருஹிட்டோவையும் சந்தித்து கலந்துரையாடினார்.

ஜப்பானிற்கான தனது இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆசியா அபிவிருத்தி வங்கி ஆளுநர்களின் 55 ஆவது வருடாந்த கூட்டத்திற்கு தலைமை வகிப்பதற்காக பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலாவை கடந்த 28ஆம் திகதி சென்றடைந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெர்டினாண்ட் டி மார்கோஸ் ஜூனியருக்கும் இடையிலான சந்திப்பு 29 ஆம் திகதி முற்பகல் மணிலா நகரில் நடைபெற்றதோடு, ஆசிய பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸுக்கும் இடையிலான நீண்ட கால நட்பை மேலும் பலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

ADB தலைவருடனான சந்திப்பும் சர்வதேச பல்கலைக்கழகமும் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் சத்சுகு அஸகாவா இடையே சந்திப்பொன்று 30ஆம் திகதி இடம்பெற்றது. அங்கு ஆசிய அபிவிருத்திக் வங்கியின் தலைவர் இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கையின் நடவடிக்கைகள் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவருக்கு தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றை இலங்கையில் நிறுவுவதற்கும் ஆலோசனை தெரிவித்தார். நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சி அடைந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் மீண்டும் அதனை வளர்ச்சிப் பாதைக்கு இட்டு சென்று நாட்டின் எதிர்காலத்தை பாதுகாப்பானதாக மாற்றிய ரணில் விக்கிரமரசிங்க ஜனாதிபதியாக மீண்டும் அதனை உறுதி செய்துள்ளார்.

# உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறும்

## பொருளாதார நிபுணர்கள் ஆரூடம்

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வேகமாக முன்னேற்றம் கண்டு வருவதாகவும் சமீபத்தில் இங்கிலாந்தைப் பின்னுக்குத்தள்ளி உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக வளர்ச்சி கண்டிப்பதாகவும் இந்திய பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். 2030 ஆகும் போது அதன் உள்ளூர் பொருளாதாரம் மென்மேலும் வலுவடைந்து உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக விளங்கும் என இவர்கள் ஆரூடம் கூறியுள்ளனர். சமீபத்தில் இந்தியாவின் வேதாந்தா நிறுவனமும் தாய்வான் நிறுவனமும் இணைந்து 19 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் குஜாரத்தில் செமிகண்டக்டர் உற்பத்தி நிறுவனத்தை ஆரம்பிக்கும் திட்டத்தை இறுதி செய்தன.



இந்தியாவின் வர்த்தக மற்றும் தொழில் துறை மத்திய அமைச்சரான பியுஷ் கோயல் அமெரிக்காவுக்கு விஜயம் செய்து முக்கியமான வர்த்தக நிறுவனத் தலைவர்கள், அரசு அதிகாரிகள், கைத்தொழில் முக்கியஸ்தர்களை சந்தித்து இந்தியாவில் முதலீடு செய்யும் வாய்ப்புகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

கடந்த மாதங்களில் பல வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்கள் இந்தியாவுக்குள் வந்ததாக பாரதப் பிரதமரின் பொருளாதார ஆலோசனை சபை உறுப்பினரான சஞ்ஜீவ் சன்யால் தெரிவித்திருப்பதாகவும் இந்தியாவின் பொருளாதார சூழல் வெளிநாட்டு முதலீடுகளுக்கு சாதகமாக உள்ளதாகவும் எனவே நேரடி முதலீடுகளுக்கான வாய்ப்பு பிரகாசமாக இருப்பதாகவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தியாவில் முதலீடு செய்வதற்கு இது ஒரு பொன்னான வாய்ப்பு என வர்ணித்துள்ள அமைச்சர் பியுஷ் கோயல், இந்தியாவின் இளம் சமுதாயம், உறுதியான தலைமை, உறுதிவாய்ந்த அரசியல் சூழல், வெளிப்படைத்தன்மை வாய்ந்த திறந்த பொருளாதாரம், நிலையான கொள்கைகள், சட்டதிட்டங்களுக்குள் அமைந்த தொழில் பயிற்சி என்பன முதலீட்டுக்கான சிறந்த இடமாக இந்தியாவை மாற்றியுள்ளன என இவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2022 மற்றும் 2050 காலப் பகுதி தொழில் செய்யக்கூடிய இளைஞர் தொகை 150 மில்லியன்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.


## இலங்கை வங்கி

எமது மேல் மாகாண மத்திய அலுவலகத்தை கொழும்பு 1-15 இல் மீள அமைப்பதற்குப் பொருத்தமான கட்டடம் ஒன்று நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கொழும்பு நகரின் எல்லைகளுக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தலாகாது.
- தரைப் பரப்பு குறைந்தபட்சம் 10,000 சதுர அடி அளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும். கட்டடமானது இரு மாடிகளைக் கொண்டிருப்பின் கீழ்த் தளமானது குறைந்தது 5,000 சதுர அடிகளாக இருத்தல் வேண்டும். மீதமுள்ள பகுதி மேல் மாடியில் இருக்க வேண்டும்.
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்சம் 30 அடிகள் அகலம் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 100 சதுர அடி அளவிலான அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும், என்பதோடு அவ்வறைக்குச் சென்று வரக்கூடிய வசதி காணப்பட வேண்டும்.
- குறைந்தது 15 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு, 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம் என்பன வங்கிக்கு பொருத்தமான விதத்தில் ஒழுங்கமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.
- நீரைச் சேமித்து வைக்க 1000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று உயரமான இடத்தில் வைத்திருக்க வேண்டும்.
- குறைந்தது 08 கழிப்பறைகள் இருக்க வேண்டும். அவை ஆண், பெண் என்ற வகையில் வெவ்வேறாக பயன்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். அதில் ஒன்று கட்டடத்தின் பின்புறம் அமைந்திருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் தளத்துக்கு தரையோடு பதித்து கூரைக்கு சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்புறக் கதவு மற்றும் யன்னல்களுக்கு கனரக இரும்பு கிறில் இடப்பட்டு பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறில்லையெனில் அமைத்துக் கொடுக்க வேண்டும்.
- கட்டடத்துக்கு தீக்காப்புறுதி இருத்தல் வேண்டும்

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள் அங்கீகாரம் பெற்ற கட்டடத்தின் திட்ட வரைபு, அளவையியல் திட்டம், உரிமைத்துவ உறுதி, இணக்கச் சான்றிதழ் போன்ற ஆவணங்களின் பிரதிகளோடு எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு அனைத்து விபரங்களையும் 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் - மத்தி),
இலங்கை வங்கி,
இல: 41, பிறிஸ்டல் வீதி, கொழுட்பு 01
தொலைபேசி : 011 233 2446
தொலைநகல் : 011 233 0728
மின்னஞ்சல் : bocwpc@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk

AA- (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



## மக்கள் வங்கி
## பம்பலப்பிட்டி கிளை
## கேள்விப்பத்திர அறிவித்தல்

தெஹிவளை பிரதேச செயலகப் பிரிவின் தெஹிவளை மேற்கு இல: 540A, கிராம அலுவலர் பிரிவினுள் எபனேசர் பிளேஸில் அமைந்துள்ளதும், 18.07 பேர்ச்சுக்கள் பரப்பளவில் இல - 78/8 எனும் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ளதுமான காணியை விற்பனை செய்வதற்கான விலைகேட்புக்கள் கோரப்படுகின்றன.

| கிளை | ஆதனத்தின் விவரணம் | ஆதனத்துக்கான அணுகல் | விசாரணைகளை மேற்கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்கள் |
|---|---|---|---|
| பம்பலப்பிட்டி | 1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரளே, பள்ளே பத்துவின் தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லைகளினுள் தெஹிவளை மேற்கு கிராம அலுவலர் பிரிவில், அமைந்துள்ளதும், "கிரேசியா கும்புர மற்றும் கிரேசியா ஓவிட்ட" எனவழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் காமினி பீ. தொடன்வெல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.03.10ஆந் திகதிய 10163ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், பரப்பளவில் 18.07 பேர்ச்சுக்களைக் கொண்டதும் "காணித்துண்டம் இல. 267C" என அடையாளமிடப்பட்டதும். பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் | நீங்கள் கொழும்பில் இருந்து காலி வீதியூடாக தெஹிவளை நோக்கிச் பயணிக்கும் போது (தெஹிவளை சந்தி வரமுன்னர்) இடது புறத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் மல்வத்த வீதியைக் காணலாம். மல்வத்த வீதியில் சுமார் 300 மீற்றர்கள் பயணிக்கும் போது உங்கள் இடப்புறமாக லியனகே வீதி அமைந்துள்ளரா காண முடியும். லியனகே வீதியில் 60 மீற்றர்கள் முன்னோக்கிச் செல்லும் போது இயைபான ஆதனம் இடப்புறத்தில் இருப்பதை உங்களால் கண்டுகொள்ள முடியும். | பிராந்திய தலைமை அலுவலகம் 011-2327847-8 **கிளை** 011-2502813 011-2500793 |

**கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022.10.19.**
**நியதிகளும் நிபந்தனைகளும்**

கொழும்பு 01, டியுக் வீதி, இல.11 எனும் முகவரியிலுள்ள மக்கள் வங்கியின் பிராந்திய தலைமை அலுவலகத்தில் (கொழும்பு தெற்கு) 2022.10.19 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை கேள்விப்பத்திரப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், உங்கள் விலைகேட்புக்கள் அந்த கேள்விப்பத்திரப் படிவங்களில் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

1. கேள்விப்பத்திரம் ஒன்றுக்கு மீளப்பெறமுடியாக் கட்டணமாக 3000/= ரூபாவையும் மீளப்பெறக்கூடிய கட்டணமாக 100,000/= ரூபாவையும் செலுத்துவதன் மூலம், பின்வரும் முகவரியிலுள்ள வலய அலுவலகத்திலிருந்து கேள்விப்பத்திரப் படிவங்களையும் நிபந்தனைகள் அடங்கிய தொகுப்பையும் நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.
2. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை பற்றிய அறிவித்தல் கடிதத் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் குறித்த கேள்விப்பத்திரப் பெறுமதியின் 20% ஐ வைப்புச்செய்தல் வேண்டுமென்பதுடன், மீதியாகவுள்ள முழுத்தொகையையும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தலும் வேண்டும். கேள்விப்பத்திரம் தொடர்பான எல்லாக் கொடுப்பனவுகளும் மக்கள் வங்கியின் ஏதேனும் கிளைக்கூடாக, மக்கள் வங்கியின் பம்பலப்பிட்டி கிளையினது அறவீடுகள் கணக்கு இலக்கமான 310100162473892 எனும் கணக்கிலக்கத்துக்கு வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.
3. உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை ''தெஹிவளை லியனகே வீதியிலுள்ள ஆதனம்" என இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட்ட கடித உறை ஒன்றினுள் வைத்து முத்திரையிட்டு 2022.10.19ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை நேரடியாகக் கையளிப்பதாக இருந்தால், சொல்லப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2022.10.19ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு முன்னர், மக்கள் வங்கியின் பிராந்திய தலைமை அலுவலகத்தில் (கொழும்பு தெற்கு) வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.
4. 2022.10.19ஆந் திகதி பி.ப. 3.15 மணிக்கு பிராந்திய தலைமை அலுவலகத்தில் (கொழும்பு தெற்கு) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட விலைமதிப்புச் சபையொன்றின் முன்னிலையில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விப்பத்திரகாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் கலந்துகொள்ள முடியும்.
5. விலைமதிப்புச் சபையானது ஏதேனும் கேள்விப்பத்திரத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. எவரேனும் கேள்விப்பத்திரகாரர் தெரிவுசெய்யப்பட்டால், அவர் ஆதனத்தை அப்போதிருக்கும் அதே நிலையில் ஏற்றுக்கொள்ள உடன்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாதனத்தைக் கொள்வனவு செய்யும் திகதியில் மீதமாகவுள்ள மின்சாரக் கட்டணம், வரிமதிப்பீட்டு வரிகள் அல்லது எஞ்சியுள்ள வேறு தொகைகள் எவையேனுமிருப்பின், அவற்றை செலுத்துவதற்குப் பொறுப்புடையவராதலும் வேண்டும்.
7. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஒட்டுமொத்தத் தொகையையும் வைப்புச் செய்ய உங்களால் முடியாதிருப்பின், மீளப்பெறக்கூடிய கட்டணமான 100,000/= ரூபாவும் அத்துடன் இக்கேள்விப்பத்திரத்துக்காக வைப்புச் செய்யப்பட்ட வேறு மேலதிக தொகைகளும் மீளச் செலுத்தப்படமாட்டாது.
8. சில உரித்துறுதிகளை அல்லது வேறு விபரங்களைச் சோதனை செய்து பார்க்க வேண்டிய தேவை உங்களுக்கு இருப்பின், அவற்றை நீங்கள் மக்கள் வங்கியின் பிராந்திய தலைமை அலுவலகத்திலிருந்து (கொழும்பு தெற்கு ) பெற்றுக்கொள்ள முடியும்.
9. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க முன்னர், எல்லா கேள்விப்பத்திரகாரர்களும், இயைபான ஆதனத்தின் உரித்து பற்றி முழுமையாகத் திருப்தியுறுதல் வேண்டும்.

**எம்.எஸ். கனக்க ஹேவகே,**
**பிராந்திய முகாமையாளர் (கொழும்பு தெற்கு),**
**இல. 11, டியுக் வீதி, கொழும்பு 01.**
**தொலைபேசி : 0112-344982-5 0112-387068**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA -Brand Finance Rating



## விலைமனுக்களுக்கான அழைப்பு

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் - PROJECT ID: P 163305**

**கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம்**

**கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை – வாகரை**

01. உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் (LDSP) செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் நிதி ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள உருப்படிகளுக்கான கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை சார்பில் உள்ளூர் நிர்வாகப் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
03. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
04. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதியை பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தரத்திற்காக கட்டிட நிர்மாணத் துறையில் பதிவு செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
05. விலைமனு ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் தகைமை தேவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. விலைமனு ஆவணத்தின் (பிரிவு 5) அட்டவணையில் மேலதிக விபரங்கள் தரப்பட்டுள்ளன.
06. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை, தலைவர்/ செயலாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு (தொ. இலக்கம்:- 0652058808 தொலைநகல்:- 0652059388) எந்த ஒரு வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் 16.00 மணி வரை அதே இடத்தில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
07. மீளளிக்கப்படாத கட்டணமாக 3000.00 ரூபாவை செலுத்தி 2022.10.04 ஆம் திகதி தொடக்கம் 2022.10.17 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை, தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
08. விலைமனுக்களை 2022.10.18 ஆம் திகதி 15.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
09. அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனுக்கள் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2022.10.12 ஆம் திகதி 10.00 மணிக்கு மட்டக்களப்பு, கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் அலுவலகத்தில் இடம்பெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கலாம்.
11. ஒப்பந்தம் வழங்கப்படுவதில் பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
12. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன் எந்த நேரத்திலும் இந்தப் பெறுகையை ரத்துச் செய்ய அல்லது திரும்பப் பெறுவதற்கு தொழில் வழங்குநருக்கு உரிமை உள்ளது.

| Ser. no | Contract No | Description of Works | Tenderable Bid Amount Excluding VAT (Mn) | Contract Period (Calendar Days) | Required Grade & Specialty | Bid Validity Period Upto | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Bid Security Amount (Rs) | Validity Period |
| 01 | LDSP/EP/BT/ KPNPS/2021/01 | Construction of (Balance Work ) Multipurpose Business Building in Puliyankandalady, Vaharai | 6.00 | 105 Days | C7 and above. Building Construction | 03/01/2023 | 60,000.00 | Till 31/01/2023 |
| 02 | LDSP/EP/BT/ KPNPS/2021/02 | Construction of (Balance Work) Sea Food Sales Store In Kayankerni | 10.00 | 105 Days | C6 and above. Building Construction | 03/01/2023 | 100,000.00 | Till 31/01/2023 |

**தலைவர்,**
**உள்ளூர் நிர்வாகப் பெறுகைக் குழு**
**கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை, வாகரை, மட்டக்களப்பு.**
**2022.10.04**

# எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி
# பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 434, ஈ.டபிள்யு.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 149, கே பி கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 137, பிரதான வீதி, அநுராதபுரம். |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 514/A, புதிய நகரம், அநுராதபுரம். |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியாகம. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/08/14/21 | நவம்பர் 2022 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 54, டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, பொரளை. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 197, மன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 02/09/15/22 | நவம்பர் 2022 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 69, தெஹிவளை வீதி, மஹரகம. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹரகம |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 124, காலி வீதி, தெஹிவளை. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 51A, டபிள்யு.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06 |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட. |
| 03/10/16/23 | நவம்பர் 2022 | இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், மஹியங்கனை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 14, புதிய நகரம், திகன |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 55, லோவர் வீதி, பதுளை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 52, தன்பார் வீதி, ஹட்டன். |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 66, நாவலபிட்டிய வீதி, கம்பளை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 230, கண்டி வீத, மாவனல்ல. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 367/1, அளுத் மாவத்தை, கொழும்பு 15. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 03, சென் லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 47, கிரான்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை. |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | பிரதான வீதி, திருக்கோவில் - 01 |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | பிரதான வீதி, பொத்துவில். |
| 04/11/17/24 | நவம்பர் 2022 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 25, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராமய |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொட. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 275, சென்ரல் வீதி, திருகோணமலை. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 71/A, பிரதான வீதி, ஆரையம்பதி. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | பிரதான வீதி கிரண். |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | திருகோணமலை வீதி கண்டலடி, வாகரை. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 114, பிரதான வீதி, கந்தளாய். |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 151,153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 3, ஏறாவூர். |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | P.W வீதி, முல்லைத்தீவு. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 55, கே கே எஸ் வீதி, சுன்னாகம். |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | பிரதான வீதி, மல்லாவி |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல 3, 5 வல்லை வீதி சங்கானை. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல 126, 128 பிரதான வீதி, பருத்தித்துறை. |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | இல 06, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | கண்டி வீதி, கொடிகாமம். |
| 05/12/18/25 | நவம்பர் 2022 | 575, K.K.S வீதி, தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ ஃபினான்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

LB FINANCE

தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.


## மேல் மாகாண சபை
### மாகாண பொறியியல் பணியகம்
### விலைமனுக்களுக்கான அழைப்பு
## திருத்தம் பற்றிய அறிவித்தல்

2022-09-30ஆம் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினகரன்'' மற்றும் 2022-10-03ஆம் திகதிய ''தினமின'' எனும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விலைக்கோரல் அறிவித்தலில் மேமா/கம்/ தொம்பே ஆரம்ப வித்தியாலயத்தின் 70'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தின் திருத்தவேலைகளுக்காக வேண்டப்பட்டுள்ள CIDA தரம் C6 மற்றும் C5 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதுடன் அது C7 மற்றும் C6 எனத் திருத்தப்படல் வேண்டும்.

ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்கு வருத்தத்தைத் தெரிவிக்கின்றோம்.

**பெறுகைப் பிரிவு,**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 011-2092504**
**தொலைநகல்: 011-2092505**

### மத்திய சுற்றாடல் அதிகார சபை

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ உபபிரிவு (2) இன் கீழான அறிவித்தல்**

**புதிய களனி பாலம் முதல் அத்துருகிரிய வரையிலான நான்கு ஒழுங்கைகளை கொண்ட உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை அபிவிருத்தி செயற்றிட்டம் (கட்டம்-II) ற்க்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு. தா. ம) அறிக்கை ராஜகிரிய (6.9 கி. மீ.) - அத்துருகிரிய (16.4 கி.மீ.) வரையிலான பகுதி**

மத்திய சுற்றாடல் அதிகார சபையினது 1988ம் ஆண்டின் 56ம் இலக்க மற்றும் 2000மாம் ஆண்டின் 53ம் இலக்க சட்டங்களால் திருத்தி அமைக்கப்பட்டவாறு 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ(1)ற்கு அமைவாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட கருத்திட்டத்துக்கான சுற்றாடல் தாக்கமதிப்பீட்டு (சு. தா. ம) அறிக்கையானது பின்வரும் இடங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணிவரை 30 நாட்களுக்கு பொதுமக்களின் பார்வைக்காக (ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர) பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகம், கடுவல/ஸ்ரீ ஜெயவர்தனபுர - கோட்டை

மாநகர சபை, கடுவல ஸ்ரீ ஜெயவர்தனபுர - கோட்டை

தேசிய சுற்றாடல் தகவல்மையம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, "பரிசரபியச",104, டென்சில்கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.

இணையம்: www.cea.lk

பொதுமக்கள் எவரேனும் இவ்விளம்பர திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தமது கருத்துக்களை பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை,**
**"பரிசரபியச",**
**இல. 104, டென்சில்கொபேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**


# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABO-9546 | பஜாஜ் | 2016 | ராகம |
| ABK-1067 | பஜாஜ் | 2016 | பாணடுரா |
| ABL-9935 | பஜாஜ் | 2016 | நுவரெலியா |
| ABL-8743 | பஜாஜ் | 2016 | ராகம |
| ABM-9468 | பஜாஜ் | 2016 | அனுராதபுரம் |
| ABD-9156 | பஜாஜ் | 2015 | எம்பிலிபிட்டிய |
| ABD-2437 | பஜாஜ் | 2015 | ராகம |
| AAO-9710 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAK-7247 | பஜாஜ் | 2013 | ராகம |
| YL-8412 | பஜாஜ் | 2011 | பாணடுரா |
| YM-8536 | பஜாஜ் | 2011 | ராகம |
| YO-5109 | பஜாஜ் | 2011 | பாணடுரா |
| QZ-6027 | பஜாஜ் | 2010 | ராகம |
| **மோட்டார் வாகனம்** | **மேக்/மாடல்** | **ஆண்டு** | **முற்றம்** |
| CAW-4877 | சுசுகி | 2017 | ராகம |
| KV-4255 | டொயோட்டா | 2010 | ராகம |
| KJ-2565 | டொயோட்டா | 2008 | ராகம |
| 64-2594 | LANCER | 1992 | ராகம |
| **இரட்டை நோக்கம்** | **மேக்/மாடல்** | **ஆண்டு** | **முற்றம்** |
| PW-0081 | மஹிந்திரா | 2013 | ராகம |
| JF-9950 | நிசான் | 1999 | ராகம |
| 252-5792 | நிசான் | 1994 | ராகம |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

எம்பிலிபிட்டிய
0773 038 137
ஹிரன்

ராகம
0113 288 893

பாண்டுரா
0773 610 142
கிளின்ட்

அனுராதபுரம்
0772 385 714
சாமில்

நுவரெலியா
0114 346 723



Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.


### பண்டாரவளை பிரதேச சபை

**2023 ஆம் ஆண்டின் குறைநிரப்பு வரவுசெலவுத்திட்ட அறிக்கையை பொதுமக்களுக்கு பரீட்சித்துப் பார்ப்பதற்காக வாய்ப்பு வழங்குதல்**

1989 இல 12 மாகாண சபை (திருத்தப்பட்ட விதிமுறைகள்) சட்டத்தின் 2ம் பிரிவு மற்றும் 1987 இல.15 பிரதேச சட்டத்தின் 223 பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 இல 15 பிரதேச சபை சட்டத்தின் 184 ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் ஊவா மாகாண ஆளுநரால் 2020.10.29ம் திகதிய வர்த்தமானி இல 2199/25 மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 2020 பிரதேச சபை வரவுசெலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் அமுல்படுத்தும் விதிகள் இல 10 (2) (ஆ) இன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு சார்பாக பண்டாரவளை பிரதேச சபையினால் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள குறைநிரப்பு வரவுசெலவுத்திட்ட அறிக்கை 2022.10.07ம் திகதி முதல் 07 வேலை நாட்கள் வரை அலுவலக நேரங்களில் பொதுமக்களுக்கு பரீட்சித்துப் பார்ப்பதற்காக பண்டாரவளை பிரதேச சபையில் வாய்ப்பளிக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கலைமாணி**
**வண.கரகஹவெல நந்தவிமல ஹிமி**
**தலைவர்**
**பண்டாரவளை பிரதேச சபை**

## மக்கள் வங்கி
### பம்பலப்பிட்டி கிளை
## கேள்விப்பத்திர அறிவித்தல்

தெஹிவள பிரதேச செயலகப் பிரிவின் தெஹிவள மேற்கு இல: 540A, கிராம அலுவலர் பிரிவினுள் எபனேசர் பிளேஸில் அமைந்துள்ளதும், 4.94 பேர்ச்சுக்கள் பரப்பளவில் இல - 02 எனும் வரி மதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ளதும், "அளுத்வத்த " எனவழைக்கப்படுவதுமான காணியை விற்பனை செய்வதற்கான விலைகேட்புக்கள் கோரப்படுகின்றன.

| கிளை | ஆதனத்தின் விவரணம் | ஆதனத்துக்கான அணுகல் | விசாரணைகளை மேற்கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்கள் |
|---|---|---|---|
| பம்பலப்பிட்டி | 1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரளே, பள்ளே பத்துவின் தெஹிவள கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லைகளினுள் தெஹிவளமேற்கு இல : 540A, கிராம அலுவலர் பிரிவில், தெஹிவள எபனேசர் பிளேஸில் அமைந்துள்ளதும், இல :- 02 எனும் வரி மதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ளதும், ''அளுத்வத்த " எனவழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் காமினி பீ. தொடன்வெல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2006.11.15ஆந் தேதிய 605 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், பரப்பளவில் 4.94 பேர்ச்சுக்களைக் கொண்டதும், ''காணித்துண்டம் A" என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக் கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும். | நீங்கள் தெஹிவள சந்தியிலிருந்து காலி வீதியூடாக வெள்ளவத்தை நோக்கி கிளை 1.1 கிலோமீற்றர் பயணிக்கும் போது உங்கள் இடது புறத்திலுள்ள எபனேசர் பிளேஸில் 30 மீற்றர்' முன்னோக்கிச் சென்றால் வீதியின் வலது புறத்தில் இந்த ஆதனத்தை உங்களால் கண்டு கொள்ள முடியும். | பிராந்திய தலைமை அலுவலகம் 011-2327847-8 **கிளை** 011-2502813 011-2500793 |

**கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022.10.19.**
**நியதிகளும் நிபந்தனைகளும்**

கொழும்பு 01, டியுக் வீதி, இல.11 எனும் முகவரியிலுள்ள மக்கள் வங்கியின் பிராந்திய தலைமை அலுவலகத்தில் (கொழும்பு தெற்கு) 2022.10.19 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை கேள்விப்பத்திரப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், உங்கள் விலைகேட்புக்கள் அந்த கேள்விப்பத்திரப் படிவங்களில் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

1. கேள்விப்பத்திரம் ஒன்றுக்கு மீளப்பெறமுடியாக் கட்டணமாக 3000/= ரூபாவையும் மீளப்பெறக்கூடிய கட்டணமாக 100,000/= ரூபாவையும் செலுத்துவதன் மூலம், பின்வரும் முகவரியிலுள்ள வலய அலுவலகத்திலிருந்து கேள்விப்பத்திரப் படிவங்களையும் நிபந்தனைகள் அடங்கிய தொகுப்பையும் நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.
2. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை பற்றிய அறிவித்தல் கடிதத் தேதியிலிருந்து 07 நாட்களுக்குள் குறித்த கேள்விப்பத்திரப் பெறுமதியின் 20% ஐ வைப்புச்செய்தல் வேண்டுமென்பதுடன், மீதியாகவுள்ள முழுத்தொகையையும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தலும் வேண்டும். கேள்விப்பத்திரம் தொடர்பான எல்லாக் கொடுப்பனவுகளும் மக்கள் வங்கியின் ஏதேனும் கிளைக்கூடாக, மக்கள் வங்கியின் பம்பலப்பிட்டி கிளையினது அறவீடுகள் கணக்கு இலக்கமான 310100162473892 எனும் கணக்கிலக்கத்துக்கு வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.
3. உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை "தெஹிவள எபனேசர் பிளேஸிலுள்ள ஆதனம்" என இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட்ட கடித உறை ஒன்றினுள் வைத்து முத்திரையிட்டு 2022 10.19ஆந் தேதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை நேரடியாகக் கையளிப்பதாக இருந்தால், சொல்லப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2022.10.19ஆந் தேதி பி.ப. 1.30 மணிக்கு முன்னர், மக்கள் வங்கியின் பிராந்திய தலைமை அலுவலகத்தில் (கொழும்பு தெற்கு) வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.
4. 2022.10.19 ஆந் தேதி பி.ப. 3.15 மணிக்கு பிராந்திய தலைமை அலுவலகத்தில் (கொழும்பு தெற்கு) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட விலைமதிப்புச் சபையொன்றின் முன்னிலையில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விப்பத்திரகாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் கலந்துகொள்ள முடியும்.
5. விலைமதிப்புச் சபையானது ஏதேனும் கேள்விப்பத்திரத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. எவரேனும் கேள்விப்பத்திரகாரர் தெரிவு செய்யப்பட்டால், அவர் ஆதனத்தை அப்போதிருக்கும் அதே நிலையில் ஏற்றுக்கொள்ள உடன்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாதனத்தைக் கொள்வனவு செய்யும் தேதியில் மீதமாகவுள்ள மின்சாரக் கட்டணம், வரி மதிப்பீட்டு வரிகள் அல்லது எஞ்சியுள்ள வேறு தொகைகள் எவையேனுமிருப்பின், அவற்றை செலுத்துவதற்குப் பொறுப்புடையவராதலும் வேண்டும்.
7. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஒட்டுமொத்தத் தொகையையும் வைப்புச் செய்ய உங்களால் முடியாதிருப்பின், மீளப்பெறக்கூடிய கட்டணமான 100,000/= ரூபாவும் அத்துடன் இக்கேள்விப்பத்திரத்துக்காக வைப்புச் செய்யப்பட்ட வேறு மேலதிக தொகைகளும் மீளச் செலுத்தப்படமாட்டாது.
8. சில உரித்துறுதிகளை அல்லது வேறு விபரங்களைச் சோதனை செய்து பார்க்க வேண்டிய தேவை உங்களுக்கு இருப்பின், அவற்றை நீங்கள் மக்கள் வங்கியின் பிராந்திய தலைமை அலுவலகத்திலிருந்து (கொழும்பு தெற்கு ) பெற்றுக்கொள்ள முடியும்.
9. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க முன்னர், எல்லா கேள்விப்பத்திரகாரர்களும், இயைபான ஆதனத்தின் உரித்து பற்றி முழுமையாகத் திருப்தியுறுதல் வேண்டும்.

**எம்.எஸ். கனக்க ஹேவகே,**
**பிராந்திய முகாமையாளர் (கொழும்பு தெற்கு),**
**இல. 11, டியுக் வீதி, கொழும்பு 01.**
**தொலைபேசி : 0112-344982-5 0112-387068**


மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA - Brand Finance Rating

# நகர்வலம்



## சீரடி சாயி சித்திரத்தேர்



சத்குரு சீரடி சாயிபாபா மகா சமாதி தினம் எதிர்வரும் 5ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது. அதிகாலை ஆராத்தி தொடக்கம் இரவு 8 மணிவரை நிகழ்ச்சிகள், கொழும்பு, புதுச் செட்டித் தெருவிலுள்ள, சீரடி சாயி மந்திரில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

காலை 7 மணிக்கு மகாவிஷ்ணு யாகம் இடம்பெறும். பகல் ஆராத்தியுடன் அன்னதானம் வழங்கப்படும்.

மாலை ஆராத்தியுடன் சீரடி சாயி சித்திரத்தேர் ஆரம்பமாகவுள்ளது. உலகிலேயே சீரடி சாயிபாபாவின் சித்திரத்தேர் பவனி நடைபெறும் ஆலயம் இதுவாகும். அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகள், இந்த நிகழ்வு நடைபெறமுடியவில்லை. சீரடி சாயி இராஜகோபுரம் எழுப்பப்பட்ட இந்தஆண்டு சித்திரத்தேர் சீரடி சாயி ராஜ செப்புக் கலசத்துடன் கொழும்பு மாநகரில் வலம் வரவிருக்கிறது.



பாராளுமன்ற தவிசாளர் குழுவினருக்கான இருநாள் செயலமர்வு கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலி மாவட்டத்தில் நடைபெற்றது. தேசிய ஜனநாயக நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட செயலமர்வின் போது, பாராளுமன்ற செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்ளும் விதமாக பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இந் நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் உட்பட நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)

## இருதய பாதிப்பு காரணமாக 34 சதவீதமானோர் உயிரிழப்பு

### குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ. முபாறக் தெரிவிப்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**

உலகம் முழுவதிலும் 17.3 மில்லியன் மக்கள் பக்கவாதம் மற்றும் இருதய நோயினால் இறப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதிலிருந்து நாம் பாதுகாப்பு பெறுவதாக இருந்தால் 30 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலாரும் ஆண்டுக்கொருமுறை இதயம் சார்ந்த பரிசோதனைகளை செய்துகொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்துவதற்காகவே உலக இதய தினம் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருவதாக குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார்.

உலக இருதய தினத்தை சிறப்பிக்கும் வகையில் அண்மையில் குச்சவெளி பிரதேச சபையில் நடைபெற்ற இலவச இரத்ததான குழுவினரை சபை உத்தியோகத்தர்களுக்குள் நியமிக்கும் நிகழ்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

எமது நாட்டில் இடம்பெறும் உயிரிழப்புக்களில் 34 சதவீதமானவை இருதய பாதிப்புக்களினால் இடம்பெறுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் தொற்றாநோய்ப் பிரிவு, இருதய விசேட வைத்திய நிபுணர்களின் நிறுவன அமைப்புடன் இணைந்து வருடந்தோரும் உலக இருதய தினத்தை கொண்டாடி வருகின்ற அதேவேளை, இதய நோயிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு திட்ட வரைபுகளை எமது அரசு சுகாதாரத்துறையுடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றது.

வளர்ச்சியடைந்துள்ள தொழில் நுட்பத்திற்கு மத்தியில் எமதுநாடு எதிர்நோக்கியுள்ள கொவிட் தொற்றுக்கு மத்தியில் இருதய நோய் மற்றும் தொற்றாநோய் போன்ற பல்வேறுபட்ட விழிப்புணர்வுகளை சுகாதார அமைச்சு மற்றும் அது தொடர்புபட்ட நிறுவனங்களும் மேற்கொண்டுவருவதுடன் அதற்காக பல மில்லியன் ரூபாய்களை செலவும் செய்து வருகின்றது என்றும் தவிசாளர் முபாறக் சுட்டிக்காட்டினார்

உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் குழந்தைகளில் 10 இலட்சம் குழந்தைகள் பிறவியிலேயே இதயக் கோளாறுடன் பிறக்கின்றன. இதயக் கோளாறு என்பது பெரும்பாலும் ஆண்களையும் வயதானவர்களையும் மட்டுமே தாக்கும் என்ற கருத்து பரவலாக உள்ளது. அது தவறாகும்.

இதயத்தில் ஏற்படும் நோய்கள் குறித்தும், அதில் ஏற்படும் பிரச்சனைகளை தவிர்க்க ஆரோக்கியமான உணவு மற்றும் உடற்பயிற்சி செய்வது போன்ற விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக பல்வேறு நிகழ்ச்சிகள் இன்று உலகம் முழுவதும் நடைபெறுகின்றது என்றார்.

## இளம் சிறார்களை கல்வித்துறையில் முன்னேற்ற ஜனாதிபதி நடவடிக்கை

**வெலிகம தினகரன் நிருபர்**



எமது இளம் சிறார்களின் கல்வித்துறை முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தை சிறப்பாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் அனைவரும் கட்சி பேதமின்றி ஜனாதிபதியின் திட்டத்திற்கு பூரண ஆதரவு வழங்க முன்வர வேண்டும் என ஐ.தே. கட்சி காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

சிறுவர் தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐ.தே. கட்சியைச் சேர்ந்தவராக இருப்பினும், அவர் முழு நாட்டு மக்களின் பொறுப்பாளி. நாம் அனைவரும் நாட்டை முன்னேற்ற கட்சி இன, மத பேதமின்றி உழைக்க வேண்டும். சர்வதேச மட்டத்தில் எமது நாட்டுக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுக்க நாம் முன்வர வேண்டும்.

நாடு முன்னேறுவதற்கு சுற்றுலாத் துறை மிகவும் அவசியமானது. போராட்டங்கள் மூலம் சுற்றுலாத் துறையை சீராக்க முடியாது. அதனால் அதற்கு பாதிப்புக்கள் தான் அதிகம். இளைஞர்கள் போராட்டங்கள் செய்தனர். ஒரு எதிர்பார்ப்புடன் தான் இதனை மேற்கொண்டனர். அதனால் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பது, உயிர்களை பலி கொள்வது நோக்கமாக இருக்கக்கூடாது.

நான் தரம் 7ல் கல்வி கற்கும் போதே பாராளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும் என ஆசை எனது மனதில் குடிகொண்டது. அந்த இலக்கை நோக்கி நான் முயற்சித்தேன். அதே போல் நீங்களும் ஒரு இலக்கை நோக்கி பயணிப்பது அவசியம் என்றார்.

## ஆப்கான் உயர் நிலைப் பள்ளிகளில் பெண்கள் பயிலத் தடை

### அந் நாட்டுக்கான ஐ.நா. அலுவலகம் கவலை



ஆப்கானிஸ்தான் உயர்நிலைப் பள்ளிகளில் பெண்கள் கல்வி பயில தலிபான் அரசு அனுமதி அளிக்க மறுப்பு தெரிவித்து வருவதை ஆப்கானிஸ்தானுக்கான ஐ.நா. உதவும் அலுவலகம் கண்டித்துள்ளது. உயர் நிலைப் பாடசாலைகளில் மாணவியருக்கு அனுமதி மறுப்பதற்கு எந்த நியாயமும் கிடையாது என்பதோடு உலகின் வேறெந்த நாட்டிலும் இதற்கு உதாரணம் காட்டவும் முடியாது என்று ஆப்கானிஸ்தானுக்கான ஐ.நா.வின் உதவும் அலுவலகத்தின் பதில் தலைவரான மார்கஸ் பொட்ஸல் தெரிவித்துள்ளார்.

"பெண்களுக்கான உயர்கல்வி மறுக்கப்படுவது அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமைகிறது. இது பெண்கள் ஒதுக்கப்படுவதற்கும், அவர்களுக்கு எதிராக வன்முறைகள் அதிகரிக்கவும், சுரண்டலுக்கும் வழிவகுப்பதோடு பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகத்துக்கும் காரணமாகிவிடுகிறது. மாணவியர் ஏழாம் ஆண்டு முதல் 12 ஆம் ஆண்டுவரை கல்வி பயில முடியாது என்பது உட்பட பல தடைகளை தலிபான்கள் ஏற்படுத்தியுள்ளனர். கடந்த வருடம் ஆட்சிக்கு வந்த தலிபான் அரசு கடந்த ஒரு வருட காலத்தில் பெண்களுக்கு எதிரான பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்" என்று இந்த ஐ.நா. அலுவலகம் தன் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

இதே சமயம் ஆப்கான் உயர் கல்விக்கான பேச்சாளர் அஹ்மட் தாகி, ஏனைய நாடுகளின் பாடத்திட்டங்களுடன் ஒப்பிடக்கூடிய வகையில் சர்வதேச தரத்தில் ஆப்கானிய பாடத்திட்டத்தை உருவாக்கப் போவதாகவும் ஏற்கனவே 35 பாடத்திட்டங்களுக்கான பணி முடிந்திருப்பதாகவும் உயர் கல்விக்கான ஒரே ஒரு பாடத்திட்டம் நாடெங்கும் அமுலுக்கு வருமென்றும் தெரிவித்திருப்பதோடு இப்பாடத்திட்டங்கள் அனைத்துமே ஆப்கானிய கலாசாரம், இஸ்லாமிய சட்டம் மற்றும் சர்வதேச கல்வித்தரம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்றும் கூறியுள்ளார்.

தற்போது ஆப்கானிஸ்தானில் 35 வெவ்வேறான பாடத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இவற்றில் இருபது இளமாணி பட்டப்படிப்புக்கானவை. 15 முதுமாணிக்கானவை.



லேக்ஹவுஸ் நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்ட மீடியா அகடமி ஊடக கற்கை நெறி வைபவ ரீதியாக (O1) ஆரம்பித்து வைக்கப்பட்டது. சிரேஷ்ட ஊடகவியலாளரும் தகவல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகமுமான மொஹான் சமரநாயக்க முதலாவது விரிவுரையை மாணவர்களுக்கு நிகழ்த்துவதை படத்தில் காணலாம்.

## பொலன்னறுவையில் 10 மணிநேர நீர்வெட்டு

**(பேருவளை விசேட நிருபர்)**

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொலன்னறுவை நீர் வழங்கல் திட்டத்தில் திருத்த வேலைகள் காரணமாக நாளை மறுதினம் 05ஆம் திகதி (05) புதன்கிழமை மு.ப. 8 மணி முதல் பி.ப. 6 வரையிலான 10 மணிநேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

பெதிவெவ நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் நீர் விநியோகிக்கப்படும் பகுதிகளான பெதிவெவ, லக்ஸஉயன, எத்துமல்பிட்டிய, தம்பரவெவ, ஜயந்திபுர, உனகலாவெகர, 800 ஏக்கர், விஜயபாகுபுர, மைத்திரிகம மற்றும் சேவாகம நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் நீர் விநியோகிக்கப்படும் பகுதிகளான பலுகஸ்தமன, குருந்துவத்த, கல்தம்பராவ, சேவாகம, தம்பாலை, வீரபுர, ஒனேகம ஆகிய பகுதிகள் நீர் விநியோகத் தடையினால் பாதிக்கப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

## கபூரிய்யா நிர்வாக சபைக்கு இரு பெண்கள் நியமனம்

மகரகம கபூரிய்யா அரபுக் கல்லூரியின் நம்பிக்கையாளர்களாக நீண்ட காலமாக பணிபுரிந்து வரும் மூவர் விலகியுள்ளதால் அந்த மூன்று வெற்றிடங்களில் இரண்டுக்கு பெண்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அல்ஹாஜ் நவாஸ் கபூர், சுபைர் கபூர், ஜெஸ்மி ஆரிப் ஆகிய மூவர்களதும் இடத்துக்கே சித்தி சிஹாரா ஏ காதரும் ஜமீலா ஹாஸிம் அப்துல் காதரும் நியமிக்கப்பட்டுள்ளனர். கபூரிய்யாவின் வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு தற்போதைய நிர்வாகம் இரு பெண்களை நியமித்துள்ளது

(ரிஹ்மி ஹக்கீம்)





சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை பாணந்துறை தொட்டவத்தை கிளையின் ஏற்பாட்டில் பாணந்துறை ஆதார வைத்தியசாலை சிறுவர் வார்ட் தொகுதியில் சிறுவர் தின நிகழ்வுகள் நடைபெற்றன. கிளையின் தலைவரும் அகில இலங்கை பேரவையின் சமூக விடயங்கள் மற்றும் நிவாரணம் தொடர்பான திட்டத் தலைவருமான இஸ்மத் ரிப்தி, தொட்டவத்தை பள்ளிவாசல்கள் பரிபாலன சங்க தலைவர் எம்.எம்.எம். இம்தியாஸ் மற்றும் வைத்தியர்கள், தாதியர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறுவர்களுக்கு பரிசில்களையும் வழங்கினர். (படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## உடப்பு பொலிஸ் அதிகாரி வீட்டுக்குள் சடலமாக மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

உடப்பு பொலிஸ் நிலையத்தின் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரியான உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 55 வயதுடைய சரத் ஜயந்த என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உடப்பு பொலிஸ் நிலையத்தில் இருந்து தனது கடமையை முடித்துக் கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை (30) குறித்த உப பொலிஸ் பரிசோதகர் வீட்டிற்கு சென்றுள்ள நிலையிலேயே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர். வீட்டில் மனைவியுடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே உப பொலிஸ் பரிசோதகர் இவ்வாறு தற்கொலை செய்துகொண்டார் என மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது எனவும் பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த உப பொலிஸ் பரிசோதகர் ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் நிலையத்தில் கடமைபுரிந்த நிலையில் கடந்த வருடம் உடப்பு பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் பல்லம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மகளிர் ஆசிய கிண்ணம்: இலங்கை முதல் வெற்றி




மகளிர் ஆசிய கிண்ணத் தொடரில் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான போட்டியில் 11 ஓட்டங்களால் டக்வர்த் லுவிஸ் முறைப்படி வெற்றியீட்டிய இலங்கை பெண்கள் தொடரில் முதல் வெற்றியை பெற்றது.

சில்ஹட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (2) நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியால் 20 ஓவர்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்து 109 ஓட்டங்களையே பெற முடிந்தது.

இந்நிலையில் ஐக்கிய அரபு இராச்சியம் பதிலெடுத்தாடியபோது மழை குறுக்கிட்டதால் வெற்றி இலக்கு 11 ஓவர்களில் 66 ஆக மாற்றப்பட்டது. எனினும் அந்த அணி 11 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 54 ஓட்டங்களையே பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகியாக இலங்கை மகளிர் அணி வீராங்கனை ஹர்ஷிதா சமரவிக்ரம தெரிவானார்.

இலங்கை தனது முதல் போட்டியில் இந்தியாவிடம் தோல்வியை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மத்திய கல்லூரி அணிக்கு இலகு வெற்றி



இலங்கை 19 வயதுக்கு கீழ்பட்ட பிரிவு மூன்று பாடசாலை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் நுகேகொட புனித ஜோன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி 40 ஓட்டங்களால் இலகு வெற்றியீட்டியது.

மீவலபலன பாடசாலை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (2) நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட யாழ். மத்திய கல்லூரி சார்பில் நியுடன் (62) மற்றும் அபிலாஷ் (54) அரைச்சதம் பெற்றனர்.

இதன்மூலம் அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 42 ஓவர்களிலும் 7 விக்கெட்டுகளை இழந்து 221 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாடிய புனித ஜோன்ஸ் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்து தடுமாற்றம் கண்டது.

இதனால் அந்த அணி 42 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களையே பெற்றது.

பந்துவீச்சில் அஜய் 4 விக்கெட்டுகளையும் சிமில்டன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

## 'ஈவா' கூடைப்பந்தாட்டம்: டிசம்பரில் நடத்த ஏற்பாடு




மேல்மாகாண கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் 'ஈவா' கூடைப்பந்தாட்ட போட்டிகள் வரும் டிசம்பர் 03, 04ஆம் திகதிகளில் கொழும்பிலுள்ள இலங்கை விமானப்படை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு, நிப்போன் ஹோட்டலில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் போட்டி ஏற்பாடுகள் தொடர்பில் சங்கத்தினர் விளக்கம் அளித்தனர்.

ஐ.சி.எல் பிரேன்ட் பிரைவட் லிமிட்டட் நிறுவனத்தால் அனுசரணை வழங்கும் இப் போட்டி, நாடு முழுவதிலுமுள்ள விளையாட்டு கழகங்கள், நிறுவனங்கள் என அனைத்து தரப்புகளும் பங்குபற்றும் திறந்த போட்டியாகவே நடைபெறவுள்ளது. 04 பிரிவுகளில் நடைபெறும் இந்தப் போட்டிக்கு வரும் நவம்பர் 25ஆம் திகதி மற்றும் அதற்கு முன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.




வரும் ஒக்டோபர் 16ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகவுள்ள டி20 உலகக் கிண்ண போட்டியில் இலங்கை அணி, அணியும் ஜெர்சி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மாஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம் அறிமுகம் செய்த இந்த ஜெர்சியை இலங்கை அணித் தலைவர் தசுன் சானக்க மற்றும் இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் ஷம்மி சில்வாவிடம் கையளிப்பதை காணலாம்.

## நிந்தவூர் இம்ரான் சம்பியன்

**ஒலுவில் மத்திய விசேட நிருபர்**




நிந்தவூர் சதாம் விளையாட்டுக் கழகத்தின் 32ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்த சதாம் டி10 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

32 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றிய இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் கல்முனை லெஜன்ட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்கொண்ட இம்ரான் அணி நிர்ணயிக்கப்பட்ட 121 ஓட்ட வெற்றி இலக்கை 9.5 ஓவர்களில் எட்டியது. நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்ற இந்தப் போட்டியில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.சீ. பைசால் காசிம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

## பாக். வெள்ளத்தால் நோய் பரவல் தீவிரம்



பாகிஸ்தானில், அரசாங்க மருத்துவமனைகளின் அவசரப் பிரிவுகளில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மருத்துவமனைகளில் பலரும் மலேரியா உள்ளிட்ட வெள்ளத்தால் பரவும் நோய்களுக்கான சிகிச்சையைப் பெறக் காத்துள்ளனர்.

அந்நாட்டில் கடந்த மாதம், பல ஆண்டுகள் காணாத அளவில் மிக மோசமான வெள்ளம் பெருகியது. அதன் காரணமாக நீரில் பரவும் நோய்கள் பல மிக வேகமாக மக்களிடையே பரவுகின்றன.

நோய்ப்பரவலை எதிர்கொள்ளும் பணியால் மருத்துவர்கள் பலரும் வேலைச் சோர்வுக்கு ஆளாகியுள்ளனர்.

நூற்றுக்கணக்கான நகரங்களிலும் கிராமங்களிலும் வெள்ளத்தால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 220 மில்லியன் பேர் கொண்ட அந்நாட்டில் 33 மில்லியன் மக்கள் அதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# சர்வதேச செய்திகள்

# பிரேசில் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கும் பெரும்பான்மை இல்லை

## இரண்டாம் சுற்று ஒக்டோபர் 30இல்

பிரேசில் ஜனாதிபதி தேர்தலில் எவரும் பெரும்பான்மை பெறாத நிலையில் பதவியில் உள்ள ஜனாதிபதி ஜயிர் பொல்சொனாரோ மற்றும் இடதுசாரியான லுலா டி சில்வா இடையில் இரண்டாம் சுற்று தேர்தல் நடைபெறவுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலில் அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்ட நிலையில் லுளலா 48 வீதமான வாக்குகளையும் பொல்சொனாரோ43வீதமானவாக்குகளையும் வென்றுள்ளனர். இது கருத்துக்கணிப்புகளை விடவும் நெருக்கமான போட்டியாக இருந்தது.

இதன்படி இரண்டாம் சுற்றுக்கு செல்லாமல் இருப்பதற்கு தேவையான 50 வீத வாக்குகளை பெற லுளலா தவறியுள்ளார்.

இந்நிலையில் பிரேசிலின் அடுத்த ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிப்பதற்கு வரும் ஒக்டோபர் 30 ஆம் திகதி இரண்டாம் சுற்று தேர்தல் நடைபெறவுள்ளது.




இதில் ஊழல் குற்றச்சாட்டில் சிறை அனுபவித்ததால் 2018 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாமல்போன லுளலா, இந்தத் தேர்தலில் பெரும் முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளார்.

எனினும் கருத்துக் கணிப்புகளில் லுளலாவை விடவும் பின்தங்கியிருந்த பொல்சொனாரோ அவைகளை பொய்யாக்கி எதிர்பார்த்ததை விடவும் அதிக வாக்குகளை வென்றுள்ளார்.

பல ஆண்டுகளாக கடும் போட்டியாளர்களாக இருந்து வரும் இந்த இருவரும் தேர்தல் பிரசாரங்களில் ஒருவருக்கு ஒருவர் குற்றச்சாட்டுகளை சுமத்துவதையே அதிகம் செய்தனர்.

தேர்தலுக்கு முன்னர் கடைசியாக நடந்த தொலைக்காட்சி விவாதத்திலும் ஜனாதிபதி பொல்சொனாரோ, லுளலாவை திருடன் என்று அழைத்தார். லுளலா ஊழல் குற்றச்சாட்டில் 580 நாட்கள் சிறை அனுபவித்ததை குறிப்பிட்டே அவர் இந்த குற்றச்சாட்டை சுமத்தினார். எனினும் லுளலா மீதாக குற்றச்சாட்டை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மறுபுறம் பொல்சொனாரோவை பைத்தியக்காரர் என்று லுளலா அழைத்தார்.

## ஜெனீவா அமர்வில் உய்குர் விவகாரம்

உய்குர் சிறுபான்மை மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் குறித்து நெதர்லாந்தைத் தளமாகக் கொண்டுள்ள தெற்காசியக் கற்கைகளுக்கான ஐரோப்பிய மன்றம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்விலேயே உய்குர் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் குறித்து இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரு பலஸ்தீனர் சுட்டுக் கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ரமல்லா நகருக்கு அருகில் இஸ்ரேலிய இராணுவத்தால் இரு பலஸ்தீனர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கார் வண்டி ஒன்றில் இருந்த நிலையில் இரு ஆடவர்கள் கொல்லப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில் 19 மற்றும் 21 வயது இளைஞர்களே கொல்லப்பட்டுள்ளனர். மற்றொரு இளைஞர் காயமடைந்துள்ளார்.

இவ்வாறு கொல்லப்பட்ட இரு இளைஞர்களதும் உடல்களை எடுத்துச் சென்ற இஸ்ரேலிய இராணுவம் காயமடைந்தவரை கைது செய்துள்ளது.

ஒரு சந்தேக நபரை கைது செய்ய முயன்றபோது மூவர் காரை மோதவிட்டு தாக்க முயன்றதாக இஸ்ரேல் விளக்கம் அளித்துள்ளது.

# அமெரிக்கா: இயன் புயலால் உயிரிழப்பு 80ஐ தாண்டியது



அமெரிக்காவின் புளோரிடா, வடக்கு கரோலைனா, தெற்கு கரோலைனா ஆகிய பகுதிகளில் இயன் புயலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 80ஐத் தாண்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட இடங்கள் மீட்சியடைய பில்லியன் கணக்கான டொலர் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, புயலை எதிர்கொள்ள அதிகாரிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்துக் குறைகூறப்படுகிறது.

புயலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. இயன் புயல் தாக்கிய இடங்களில் வெள்ள நீர் வடிந்து வருகிறது.

எனவே மீட்புக் குழுக்கள் தொலைதூரப் பகுதிகளில் தேடல் பணிகளை மேற்கொள்ள முடிவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதுவரை நூற்றுக்கணக்கானோர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

## சுவீடனின் பாபோவுக்கு மருத்துவத்திற்கு நோபல்



மனித பரிணாம வளர்ச்சி குறித்த தனது ஆய்வுக்காக சுவீடனின் உடற்கூறியல் நிபுணர் ஸ்வன்டே பாபோவுக்கு 2022ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

'அழிந்துபோன ஹோமினின்களின் மரபணுக்கள் மற்றும் மனித பரிணாமம் பற்றிய கண்டுபிடிப்புகளுக்காக' அவருக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்விடன் தலைநகர் ஸ்டொக்ஹோமில் இருந்து இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுகள் பெருவோரின் விபரங்கள் நேற்று முதல் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இதில் நேற்று மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் பௌதீகவியலுக்கான நோபல் பரிசு இன்று (04) அறிவிக்கப்படவிருப்பதோடு தொடர்ந்து இராசாயனவியலுக்கான நோபல் பரிசு நாளை (05) அறிவிக்கப்படும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.